# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வமான ஏடு குரல் 11. நவம்பர் 86. அன்பளிப்பு ரூ 2.

## எமது சோசலிசப் பாதை

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு.வே. பிரபாகரன் அண்மையில் பிரபல இந்திய தினசரி பத்திரிகையான THE HINDU வுக்கு அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகளை இங்கு சுருக்கித் தருகிறோம்.

"சோசலிசத்தத்துவமே எமது அரசியல் சித்தாந்தம், தமிழீழமே எமது அரசியல் குறிக்கோள்"

"சோசலிசம் என்பது இன்று பல ரகங்களைக்கொண்டதாக இருக்கிறது. சோசலிசத்திற்கு ஒருவர் அளிக்கும் வியாக்கியானத்திலிருந்தும் அதனை அவர் கடைப்பிடிப்பதிலிருந்துமே அதன் வேறுபாடுகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இன்று எல்லோருமே தம்மைச் சோசலிச வாதிகளெனக் கூறிக்கொள்கிறார்கள். ஜெயவர்த்தன கூட தன்னை ஒரு சோசலிச வாதியென அழைத்துக்கொள்ளவில்லையா? சோசலிசம் பேசுகிறவர்கள் அதனை நடைமுறைப்படுத்தும்பொழுது தான் அதன் தன்மையை நாம் தீர்மானிக்கமுடிகிறது. எமது மக்களின் அபிலாசைகளையும், நலன்களையும் முழுமையாகப் பிரதிபலிக்கும் ஒரு சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்புவதே எமது இலட்சியம். வெகுசனத்தின் ஆக்கசக்திக்கு ஊக்கமளிப்பதாக எமது சோசலிச இலட்சியம் அமையும். முன்பு ஒருமுறை யூகோஸ்லாவியாவின் சோசலிச வடிவம் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அரசியல் நடைமுறையில் சனநாயகப் பண்புகளை மேம்படுத்துவதான ஒரு சோசலிசப் பரிசோதனையாக இது அமையப்பெற்றது என்பதே எமது கருத்து. தொழிலாளரின் சுயாட்சி என்ற திட்டத்தின்கீழ் இந்த சோசலிச அமைப்பில் சனநாயக உரிமைகளுக்கு இடம் அளிக்கப்பட்டது".

"ஒரு சோசலிச சமுதாய அமைப்பில் பரந்தளவில் மக்கள் சனநாயகத்துக்கு இடமளிப்பதே எமது குறிக்கோள். யூகோஸ்லாவியா பாணியில் சோசலிச அமைப்பைக் கட்டுவது எமது நோக்கமல்ல. எமக்கே உரித்தான, தனித்துவமான ஒரு சோசலிச வடிவத்தை நாம் எதிர்காலத்தில் அமைப்போம். யூகோஸ்லாவியா மேற்கொண்ட இன்னொரு முயற்சியையும் நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும். நேருவின் காலத்தில் நேருவுடன் சேர்ந்து மூன்றாவது உலக சக்தியை அது உருவாக்க முயன்றது. அணிசேரா மண்டல நாடுகளின் இயக்கத்திற்கு இது மூலமாக அமைந்தது. முற்போக்கான ஒரு சோசலிசப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதே சமயம், வேறெந்த சக்திகளோடும் கூட்டுச்சேராது ஒரு சுதந்திரமான பாதையை யூகோஸ்லாவியா மக்கள் தழுவினர். இப்படியான அம்சங்கள் எம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளன. இதனை நாம் மிகவும் ஆழமாக பரிசீலனைசெய்து பார்க்கிறோம். இந்த வழிமுறை பற்றியும் நாம் எண்ணிப்பார்ப்பதுண்டு. எமது கலாச்சாரம், எமது வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு உகந்ததாக, ஒரு சோசலிச சமுதாய அமைப்பை கட்டியெழுப்புவது பற்றியே நாம் சிந்தித்து வருகிறோம்"

1961ம் ஆண்டில் சமஷ்டிச் சுயாட்சி கோரி எமது மக்கள் நடத்திய சத்தியாகிரக எழுச்சிப்போராட்டம் தமிழீழத்தில் அரச நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்தது. 1961ம் ஆண்டளவில் சமஷ்டிக்கோரிக்கையானது மிக கூர்மையடைந்ததாக, மிகக் உக்கிரமடைந்ததாக விளங்கியது. இன்று நடைபெறுவது என்னவென்றால், (ஏளனமாகச் சிரித்துக் கொண்டே சொல்கிறார்) மிகவும் பின்நோக்கிய செயல்முறைதான். 1957ம் ஆண்டு, பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்திற்கும் குறைவாகவே இன்றைய பேச்சு அமையப்பெற்றிருக்கிறது. சமஷ்டிக் கோரிக்கைக்கும் குறைவாகவே சமரசத்திட்டம் உள்ளது. இன்று நாம் மாகாணம் பற்றி, மாகாண சபைகள் பற்றி பேசுகிறோம். இந்தப் பேச்சுக்களை நீங்கள் உன்னிப்பாக விமர்சித்துப் பார்த்தால் ஒரு உண்மை புலனாகும். அதாவது ஜெயவர்த்தன எமது பிரச்சினையை பின்நோக்கிய பாதையில் இழுத்துச்செல்கிறார் என்பதுதான். 1961ம் ஆண்டில், சமஷ்டிச்சுயாட்சி மூலம் எமது பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமென எமது மக்கள் மத்தியில் பெரிய உற்சாகம் நிலவியது. ஆனால் அதற்குப்பின் ஒரு நீண்ட கசப்பான அனுபவத்தைத்தான் எமது மக்கள் பெற முடிந்தது. பெரிய நெருக்கடிகளை, பெரிய இழப்புகளை, பெரிய துன்பங்களைத்தான் எமது மக்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. எமது தலைவர்களும் காலத்திற்குக் காலம் சிங்கள இனவாத அரசியல்வாதிகளை நம்பி மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டார்கள்."

"ஜெயவர்த்தனவினதும் திருமதி. பண்டாரநாயக்காவினதும் சமீபத்திய நிலைப்பாட்டைப் பாருங்கள். மாகாணசபை என்ற குறைந்தபட்ச திட்டத்திற்கே திருமதி பண்டாரநாயக்காவும் மற்றும் எதிர்க்கட்





## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

புலிகளின் குரல்

# சனநாயகமும் சோசலிசமும்

சனநாயகம் என்றால் என்ன? சோசலிசம் என்றால் என்ன? இந்த இரண்டு அரசியல் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரணானவையா? இக்கோட்பாடுகள் இரு மாறுபட்ட, முரண்பாடான அரசியல் அமைப்புகளை குறித்து நிற்கின்றனவா? இந்தக் கேள்விகளுக்கு தெளிவான பதில்கள் காண்பதுடன் எமது அரசியல் நிலைப்பாட்டையும் இங்கு எடுத்து விளக்க விரும்புகிறோம்.

சனநாயகமும் சோசலிசமும் இரு முரண்பட்ட அரசியல் இலட்சியங்களை குறித்து நிற்பதாக பலர் கருதக்கூடும். இது தவறான கண்ணோட்டமாகும். மூல அர்த்தத்தில் இக்கோட்பாடுகள் முரண்பட்டவை அல்ல. மாறாக, இவை சமூக நீதியையும் தர்மத்தையும் தழுவிக்கொள்ளும் ஒரு அரசியல் சமுதாயத்தை குறிக்கின்றன. இந்த சமுதாயத்தில் தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்கு உண்டு என்பதை இக்கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. அப்படியிருக்கும் பொழுது இந்தத் தவறான கண்ணோட்டம் எவ்விதம் தோற்றம் கொண்டது? இந்த அரசியல் கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக கொள்ளப்படுவது ஏன்?

மேற்கத்தைய முதலாளிய உலகில் 'சனநாயகம்' என்ற போர்வையில் ஒரு அரசியல் அமைப்பு நடைமுறைப் படுத்தப்படுகிறது. அதே வேளை கம்யூனிச உலகில் 'சோசலிசம்' என்ற கருத்துருவில் ஒரு அரசியல் முறை செயலாகிறது. இவ்விதம் இந்த இரு உலகிலும் செயற்படுத்தப்பட்டுவரும் அரசியல் வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விரு கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரணானவை என்ற தவறான கண்ணோட்டம் எழுந்திருக்கலாம். இதுபற்றி சிறிது விரிவாகப் பார்ப்போம்.

கிரேக்க மொழியின் மூல அர்த்தத்தில் சனநாயகம் என்ற சொல் மக்கள் களத்திலிருந்து பிரவாகமெடுக்கும் அரச அதிகாரத்தை, அதாவது மக்கள் ஆட்சியைக் குறிக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான நீண்ட அரசியல் வரலாற்றுப் பயணத்தில் இந்தக் கோட்பாடானது பல அர்த்த பரிமாணங்களைக் கொண்டதாக செழுமை பெற்றுள்ளது. இக் கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கத்தைய முதலாளிய சமுதாயங்களில் ஒரு திட்டவட்டமான அரசியல் ஆட்சிவடிவமும் உருவகம் கொண்டுள்ளது. இன்று சனநாயகம் என்ற சொல் பல்வேறு மனித சுதந்திரங்களையும், உரிமைகளையும் குறிப்பிடுகிறது. சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் பெரும் பணியில் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையும் பங்கும் உண்டு என்பதை வலியுறுத்துகிறது. சிந்தனைச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் —இப்படியான பல்வேறு சுதந்திரங்கள் மக்களின் சனநாயக சுதந்திரங்களாகக் கொள்ளப்படுகின்றன. தேர்தல் முறையும் தெரிவு செய்யும் முறையும் அரசியல் பன்மை முறையும் சனநாயகப் பண்புகளாக பேணப்படுகிறது. சுதந்திரம், சமத்துவம், தர்மம் ஆகிய உன்னத இலட்சியங்களை சனநாயகம் மேன்மைப்படுத்துவதோடு மக்களின் இறைமையில், மக்களின் தீர்ப்பில், மக்களால் மக்களுக்காக கட்டியெழுப்பப்படும் ஒரு அரச ஆட்சி முறையை வலியுறுத்துகிறது.

கொள்கை அடிப்படையில், கோட்பாட்டு ரீதியில், கருத்துருவ அர்த்தத்தில் சனநாயகமானது ஒரு மகத்துவமான அரசியல் ஆட்சி வடிவத்தை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் நடைமுறை யதார்த்தமோ வேறு. மேற்கத்தைய முதலாளித்துவ சமுதாயங்களிலும் மற்றும் சில நாடுகளிலும் நிலவும் ஆட்சி அமைப்பு முறையில் சனநாயக தத்துவம் பேணப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். இந்நாடுகளின் அரசியல் யாப்புகளில் மட்டும் சனநாயக இலட்சியங்கள், உரிமைகள், சுதந்திரங்கள் எல்லாம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சனநாயகத்தின் பெயரால் நடைபெறும் ஆட்சியோ வேறு. மனிதாபிமானமற்ற சுரண்டல் முறையும், சமூக அநீதிகள் நிறைந்த, பொருளாதார ஏற்றத்தாழ்வுடைய ஒடுக்கு முறையுமே இந்த ஆட்சி அமைப்பில் காணக்கூடியதாக இருக்கிறது. அரசியல் சுதந்திரம் என்றும், தனி மனித உரிமை என்றும், பல கட்சிப் போட்டி என்றும் நடைபெறும் இந்த சனநாயக சதுரங்க விளையாட்டில் ஆட்சிபீடம் ஏறுவதும், அதிகாரம் செலுத்துவதும் முதலாளி வர்க்கமே. காலத்திற்கு காலம் மக்கள் தேர்தல் என்று ஒட்டுப் பதிவெடுக்கும் செப்படி வித்தைகாட்டி பணம் படைத்த வர்க்கமே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்கிறது.

முதலாளித்துவ ஆளும்வர்க்கமானது சனநாயக தத்துவத்தை, சனநாயகத்தின் உன்னத இலட்சியத்தினை ஒரு சித்தாந்தக் கருவியாகவே கையாளுகிறது. மக்கள் ஆட்சி என்று கூறி மக்களை ஏமாற்றும் கருத்துலக மாயையை இந்த சித்தாந்தம் பிறப்பிக்கிறது. சமூக யதார்த்தத்தை திரித்துக்காட்டி, சமூகத்தில் நிலவும் மூல முரண்பாடுகளை மூடி மறைத்து, முதலாளித்துவம் தனது ஆட்சியை நியாயப்படுத்தி நிலைநாட்டவும் இந்த சித்தாந்தம் பயன்படுகிறது. இந்த வகையில் சனநாயகமானது முதலாளித்துவ சமூகங்களிலுள்ள ஆளும் வர்க்கத்தின் அபிலாசைகளைப் பேணும் சித்தாந்த வடிவமாகவும் அரசியல் நடைமுறையாகவும் இயங்கிவருகிறது.

மேற்கத்தைய உலகில் நடைமுறையாகும் சனநாயக ஆட்சி அனுபவத்திலிருந்து ஒரு அரசியல் உண்மையை நாம் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். முதலாளிய பொருள் உற்பத்தி வடிவத்தில், அதாவது சுரண்டல் முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார சமூகங்களில் உண்மையான சனநாயகம் தோற்றம்கொள்ள முடியாது என்பதுதான். பொருளாதார அமைப்பானது சமூக உறவுகளில் ஏற்றத்தாழ்வையும், அநீதியையும், அசமத்துவத்தையும் உண்டுபண்ணும்பொழுது எவ்வித சனநாயக அரசியல் சுதந்திரங்களும் சாத்தியமாகப் போவதில்லை. அதனால் முதலாளிய அரசு தன்னை சனநாயக மக்கள் ஆட்சி என கூறுவதெல்லாம் அர்த்தமற்ற வார்த்தைப் பிரயோகமே அன்றி வேறொன்றுமல்ல. இதன் காரணமாகவே முதலாளிய சனநாயகத்தை ஒரு ஏமாற்றுவித்தை, ஒரு பெரிய பொய்மை என்று மார்க்ஸ், லெனின் போன்ற அரசியல் ஞானிகள் வர்ணித்தனர்.

பொருளாதார சமத்துவம் நிலவும் ஒரு சமுதாயத்தில்தான் உண்மையான சனநாயகம் மலரமுடியும். இந்தப் பொருளாதார சமத்துவமானது ஒரு சோசலிச சமுதாயத்தில்தான் சாத்தியமாகிறது. சோசலிச சமுதாயம் என்னும்பொழுது பொருள் உற்பத்தி சாதனங்கள் பொதுவுடைமையாக்கப்பட்ட, வர்க்க முரண்பாடுகள் நீங்கிய, மனிதனை மனிதன் சுரண்டும் பொருளாதார அமைப்பு முறை ஒழிக்கப்பட்ட, சமூக நீதியும் சமத்துவமும் நிலவும் ஒரு சமூக அமைப்பையே குறிக்கிறோம். பொருளாதார சமத்துவம் நிலவும் ஒரு சமூகதர்ம சமுதாயத்தில்தான் சனநாயக சுதந்திரங்களைப் பேணி உண்மையான மக்களாட்சியை நிர்மாணிப்பது சாத்தியமாகும். இந்த வகையில் சோசலிசமும் சனநாயகமும் ஒன்றோடு ஒன்று ஒத்திசைவாக வளர முடியும். ஒன்றை ஒன்று மேம்பாடுபடுத்த முடியும். மனிதத்தையும், மனித விடுதலையையும் கட்டிவளர்க்கக் கூடிய ஒரு மகோன்னதமான புரட்சிகர சமுதாயம் மலர்வதற்கு இது வழிவகுக்கும்.

ஆனால் இன்றைய சோசலிச முகாம் நாடுகளில் சனநாயகம் பேணப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. மாபெரும் யுகப் புரட்சிகளையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமுதாய மாற்றப் பரிசோதனைகளையும், நடத்தி, பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டிய இந்நாடுகளில் சனநாயகக் கோட்பாடுகளை முதலாளித்துவத்தின் 'சித்தாந்தக் குப்பைகள்' என உதாசீனம் செய்யும் போக்கு காணப்படுகிறது. இந்த நிராகரிப்பு காரணமாக சனநாயக சுதந்திரங்கள் இங்கு பேணப்படுவதில்லை. முதலாளிய சனநாயகத்திற்கும், உண்மையான சோசலிச சனநாயகத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகளை கண்டு கொள்ளாததால் எழுந்த தவறான பார்வையே இந்த நிலைப்பாட்டிற்கு காரணமாக இருக்கலாம். மார்க்சியமானது முதலாளிய சனநாயகத்தைக் கண்டிக்கிறது. சுரண்டல் முறை தாண்டவமாடும் முதலாளிய பொருள் உற்பத்தி சமூகங்களில் கடைப்பிடிக்கப்படும் போலி சனநாயகத்தை மார்க்ஸும் லெனினும் வன்மையாக விமர்சித்தனர். சமூக அநீதியை அடிப்படையாகக் கொண்ட முதலாளிய அமைப்பில் சனநாயகம் சாத்தியமாகாது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்களே அன்றி சனநாயகத்தின் சாராம்சத்தை நிராகரிக்கவில்லை. அதாவது, மக்களாட்சியை, மக்களே தமது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் சுதந்திரத்தை அவர்கள் நிராகரிக்கவில்லை. இந்த உண்மையான சனநாயக இலட்சியம் சோசலிச சமுதாயத்தில் மட்டும் நடைமுறைப்படுத்த முடியும் எனக் கருதினர். ஆகவே, மார்க்சியமானது முதலாளிய சனநாயகத்தை நிராகரிக்கும் அதேவேளை சோசலிச சனநாயகத்தை வலியுறுத்துகிறது.

சோசலிச சமுதாய புனருத்தாரணத்துடன் சனநாயக சுதந்திரங்களுக்கு முக்கியம் அளித்து ஒரு புதுமையான மக்களாட்சி அமைப்பை உருவாக்க முயன்ற கமியூனிஸ நாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சோசலிச பரிசோதனையில் யூகோஸ்லாவியா முன்னணி வகிக்கிறது. கட்சிச் சர்வாதிகாரத்தை கட்டுப்படுத்தி, சமூக உறவுகளை சனநாயகமயப்படுத்தி, உழைக்கும் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கி ஒரு புரட்சிகரமான சமதர்ம சமுதாயத்தை கட்டி எழுப்பிய பெருமை யூகோ மக்களையே சாரும்.

பொருளுற்பத்தி உறவுகளில் அடிப்படையான மாற்றங்களை நிகழ்த்தி, பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டி, உலக சோசலிசப் புரட்சிகள் மாபெரும் வரலாற்று சாதனையை நிலைநாட்டின. இந்த மகத்தான சாதனையின் பரிபூரண பயனை அடைவதாயின் பொருளுறவுடன் நின்றுவிடாது சமூக உறவுகளிலும் அதாவது மனித உறவுகளிலும் புதுமையான மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும்.

அரசு என்ற எல்லாம் வல்ல சக்திக்கு மனிதன் அடிமையாகி, அரச உடமையாகி, வெறும் உற்பத்தி இயந்திரமாக இயங்குவதென்பது சோசலிச இலட்சியத்திற்கு முரணானது. சமூக உறவுகளை சிறப்பாக அமைத்து, மனித சுதந்திரத்திற்கு உத்திரவாத மளித்து, மனிதனின் அதிஉன்னத வளர்ச்சிக்கு வழிகோலுவதுதான் சோசலிசத்தின் குறிக்கோள். மனிதாபிமானத்தையும் மனித விடுதலையையும் இலக்காகக் கொண்ட சனநாயகப் பண்புகளால் சோசலிசம் செழுமைப்படுத்தப்பட வேண்டும். அல்லாவிடில் அரச பயங்கரவாதமும், சர்வாதிகாரமும், இயந்திரமயமான வாழ்வும் தலைத்தோங்க இது வழிகோலும்.

ஒரு புதுமையான, புரட்சிகரமான சம தர்ம சமுதாயத்தை கட்டி எழுப்புவதே எமது விடுதலை இயக்கத்தின் இலட்சியம். நாம் நிர்மாணிக்கத் திட்டமிடும் சோசலிச சமூக வடிவமானது எமது மக்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார வாழ்வை மேம்படுத்துவதாக அமையும். சனநாயக சுதந்திரமும், சமூக தர்மமும் பேணப்படும் ஒரு உன்னத சமுதாயக்கட்டுமானமாக அது விளங்கும். வர்க்கம், சாதி என்ற சுரண்டல் முறைகள் ஒழிக்கப்பட்டு, பெண் ஒடுக்குமுறை போன்ற சமூக அநீதிகள் அழிக்கப்பட்டு, உழைக்கும் பாட்டாளி மக்களின் சுவர்க்க பூமியாக சோசலிச தமிழீழம் திகழும். மக்களின் அடிப்படை உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு மக்களே தமது அரசியல்,சமூக, பொருளாதார வாழ்வை நிர்ணயிக்கக்கூடியதான ஒரு உண்மையான மக்கள் அரசை உருவாக்குவதே எமது இலட்சியம். நாம் நிர்மாணிக்க விரும்பும் புரட்சிகர சோசலிச வடிவமானது எந்தவித பாணியிலும் அமையாது, எமக்கே உரித்தான, தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும் எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதாகவும் உருவாக்கப்படும்.

இப்படியான ஒரு புரட்சிகரமான மக்களாட்சியை கட்டி எழுப்புவதாயின் அது ஒரு உண்மையான புரட்சிகர இயக்கத்தால் மட்டுமே சாத்தியமாகும். இந்தப் புரட்சிகரஇயக்கத்தை மக்களே தெரிவு செய்யவேண்டும். இவ்வியக்கம் மக்கள் இயக்கமாக, மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் இயக்கமாக, மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக அமையும்போது தமிழீழத்தில் ஒரு புதுமையான சனநாயக சோசலிச அரசை கட்டி எழுப்பமுடியும்.

---

சிகளும் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன. அதேவேளை தமிழரின் உரிமைக்காக ஓரளவு குரல்கொடுக்கும் திரு. விஜேகுமாரதுங்க போன்றவர்களின் மேடைக்குக் குண்டுகள் வீசப்படுகின்றன. இவ்விதமான இன வெறியும் பேரினவாதமும் தலைவிரித்தாடும்வரை, எமக்கு தமிழீழத்தைத் தவிர, தமிழ்த் தாய்மண்ணில் தனியரசை நிறுவுவதைத்தவிர, வேறு வழி .இல்லை.''

## ஒரு கட்சி அரசு

*ஒரு கட்சி அரசை அமைப்பதுதான் விடுதலைப்புலிகளின் அரசியல் நோக்கமா?*

மக்கள் எதை விரும்புகிறார்கள்; எந்த வழியைப் பின்பற்ற நினைக்கிறார்கள் என் பதில்தான் இது தங்கியிருக்கிறது. மக்கள் சுதந்திரமான முறையில் தாம் விரும்பும் கட்சியைத் தேர்ந்தெடுக்கலாம். இந்தியாவை உதாரணத்திற்கு எடுத்துப்பாருங்கள். காங்கிரஸ் கட்சியானது நீண்ட காலத்திற்கு இந்திய அரசியல் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தவில்லையா? இன்றும் இந்தக் கட்சிதானே ஆட்சியில் இருக்கிறது? எமது நிலைப்பாடு பற்றி மற்றவர்கள் மனதில் ஐயப்பாடும், சந்தேகமும் எழுந்துள்ளதாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். போராட்டத்தில் பங்குகொள்ளாமல் தலைவர்களாக பதவிக்கு வர விரும்பும் சிலரால்தான் இவ்விதமான தப்பபிப்பிராயங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதே எனது கருத்து. போராட்டத்தில் எவ்வித அக்கறையும் காட்டாது. தம்மை அந்நியமாக்கிக்கொண்ட இவர்களுக்கு அரசியல் தலைமைப்பீடத்தில் ஏறும் பேராசை நிறையவுண்டு. இவர்களது மனதில்தான் எமது கூற்று விசேசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.''.

''சோசலிச நாடுகளின் பரந்த அரசியல் அரங்கைப்பாருங்கள். அங்கு என்ன நிலவுகிறது? அங்கு எல்லாம் ஒரு கட்சிதானே புரட்சிக்கு தளம் அமைத்தது. பின்பு மக்களின் ஆதரவைப்பெற்று அரசியல் ஆட்சிப்பீடம் ஏறியது. சோவியத் ஒன்றியம், கியூபா மற்றும் சகல சோசலிச் நாடுகளும் இதற்கு உதாரணமாக திகழவில்லையா?...''

## சமரசப் பேச்சுகள்

*தற்போதைய சமரசப்பேச்சுவார்த்தைகள் பற்றியும் அதில் இந்தியாவின் மத்தியஸ்துவம் பற்றியும் விடுக்கப்பட்ட கேள்விக்குப் பதில்.*


''ஜெயவர்த்தன ஏதோ உருப்படியாகக் கொடுக்கப்போகிறார் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் இந்திய அரசு எம்மை பேச்சுக்களில் கலந்து கொள்ள வலியுறுத்துகிறது என்பது இங்கு முக்கியமல்ல. ஒரு நியாயபூர்வமான அடிப்படை இங்கு அவசியம். அதாவது தமிழ் மக்களின் அத்தியாவசியமான தேவையின் அடிப்படையில்தான் ஜெயவர்த்தனவை பேச்சுவார்த்தைக்கு கொண்டுவரவேண்டும். என்னைப்பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழ்த் தாயகம் என்பது ஒரு அடிப்படையான பிரச்சனை. ஜெயவர்த்தன இந்த முக்கிய பிரச்சனையை நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கிவிட்டு கூட்டணியைப பேச்சுக்கு அழைத்திருக்கிறார். அப்படியிருக்கும்பொழுது இந்தப்பேச்சுவார்த்தைகளில் அர்த்தம் இருக்கிறது என சொல்லலாமா? அவர் எதைக்கொடுக்க விரும்புகிறார் என்பதை பரிசீலனை செய்வதை விடுத்து, இந்திய அரசானது இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அடிப்படையைக் கண்டுபிடிக்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரை இதுவே பயனைத் தரக்கூடியது என நாம் கருதுகிறோம்''

## தமிழீழத் தனியரசு

*தமிழீழத் தனியரசு சாத்தியமாகுமா?*

''நிச்சயமாக முப்பது ஆண்டுகளுக்கு மேலான எமது போராட்ட அனுபவம் எம்மை இந்த இலட்சியப்பாதையில் தவிர்க்கமுடியாதபடி தள்ளியிருக்கிறது என்பதை எமது வரலாற்றுப்பின்னணியிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஆகவே தமிழீழத் தனியரசே எமக்கு பாதுகாப்பளிக்கும் தீர்வாக அமையுமே தவிர இதற்கு மாற்றுத்திட்டம் எதுவுமில்லை என்பது எமது கருத்து. தமிழீழக் கோரிக்கையானது. பல கட்டங்களைக்கொண்ட. நீண்ட போராட்ட வரலாற்றில் பரிணமம் பெற்றது.

# ரத்தக்கறை படிந்த நாட்கள்




## 16.6.86

யாழ் மாவட்டத்தில் உள்ள வசாவிளான் இராணுவ முகாமிற்கு அருகில் இருந்த கிட்டத்தட்ட 23 வீடுகள் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டன. 93 தமிழ் மக்கள் அகதிகளாகினுர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புன்னைக்குடா என்ற இடத்தில் காலம் காலமாக வாழ்ந்து வந்த 7 அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தினரால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள். பின்னர் அவ்வுடல்களின் கண்கள் தோண்டப்பட்டு, கை, கால்கள் துண்டாக்கப்பட்டநிலையில் பவுழங்கேணி என்னும் இடத்தில் வீசப்பட்டிருந்தது.

## 19.6.86

திருகோணமலையில் உள்ள தம்பலகாமம் என்னும் இடத்தில் 4 அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இறந்தவர்களில் ஒருவர் தம்பலகாமம் பிரஜைகள் குழு உறுப்பினர்.

## 20.6.86

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ரோசரி ஆசிரமத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் மிகவும் கொடூரமான முறையில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். இவரது இரண்டு கைகளும் வெட்டியெறியப்பட்ட பின்னர், மார்பில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த 30 வருடங்களாக தோலகட்டி கத்தோலிக்க மடத்தில் சேவை செய்து வந்தார்.

## 25.6.86

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிக்கொண்டிருந்த 25 தமிழ் அகதிகள் பிரயாணம் செய்த படகு கடலில் சிறிலங்கா கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. இவர்கள் கடற்படையினரால் கத்திகள், கோடாரிகள் வாள்களைக் கொண்டு படுகோரமாக கொலைசெய்யப்பட்டார்கள். இச்சம்பவம் மன்னார் மாவட்டத்தில் உள்ள எருக்கலம்பிட்டி . கடற்பகுதியில் நடந்தது.

## 26.6.86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 6ம் கட்டை எனும் இடத்தில் 6 தமிழர்கள் சிங்கள இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அத்துடன் அங்கிருந்த 70க்கும் மேற்பட்ட கடைகளும், வீடுகளும் சூறையாடப்பட்ட பின்னர் எரித்து சாம்பராக்கப்பட்டன. தம்பலகாமம் என்னும் இடத்தில் 30 தமிழர்கள் சிங்கள ஊர்காவல் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் வில்பத்து எனும் இடத்தில் கொலைசெய்யப்பட்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் 30 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் பின்னர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டார்கள்.

## 30.6.86

யாழ் மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட மோட்டார்செல் ஒன்று ஒரு வீட்டினுள் விழுந்து வெடித்தமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டார்கள். இதைவிட மேலும் 4 பேர் படுகாயமடைந்தார்கள். யாழ் மாவட்டத்தில் நாவற்குழி எனும் இடத்தில் இராணுவ ஹெலிகாப்டர் ஒன்று சிறுரக ஏவுகணைகளை ஏவியமையால் ஒரு பாடசாலை மாணவனும், ஒரு மூதாட்டியும் கொல்லப்பட்டார்கள்.

## 1.7.86

மன்னார் மாவட்டத்தில் உள்ள பேசாலை கடற்பிராந்தியத்தில் 5 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த அப்பாவி மீனவர்கள் மீது, தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து 3 பீரங்கிப்படகுகளில் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 5 தமிழ் முஸ்லீம்கள் மற்றும் ஒரு தமிழர் உட்பட மொத்தம் 6 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பின்னர் கரையை நோக்கி வந்த ஏனைய மீன்பிடிப்படகுகளின் மீதும் கரையிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மேலும் 7 தமிழ் முஸ்லீம்களும் 2 தமிழரும் படுகாயமடைந்தனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் சிங்கள கடற்படையினரால் தாக்கப்பட்டார்கள். இதனால் 9 இந்திய மீனவர்கள் பலியாகினுர்கள். இச்சம்பவத்தில் தப்பிய ஒரு மீனவரை எமது வீரர்கள் காப்பாற்றி கரைசேர்த்தார்கள்.

## 3.7.86

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 12 மலையகத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டார்கள். இதைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 500 தோட்டத் தொழிலாளர்கள் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டார்கள். இதை கண்டு அச்சமுற்ற பொலிசார் 12 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து சிங்கள காடையர்கள் தமிழர்களது லயன்களின் உள் புகுந்து வீடுகளுக்கும், கடைகளுக்கும் தீ வைத்தார்கள். இதில் 35 வீடுகளும், 28 கடைகளும் முற்றாக சேதமடைந்தன. கார் ஒன்று வழிமறிக்கப்பட்டு அதில் இருந்த 5 தமிழர்களும் உயிருடன் காருடன் சேர்த்து பெற்றோல் ஊற்றி கொளுத்தப்பட்டார்கள். ஆனால் இவர்கள் பலத்த தீக்காயங்களுடன் தப்பிவிட்டார்கள். இந்த வன்முறையின் காரணமாக 300க்கும் அதிகமான தமிழ் குடும்பங்கள் தங்களது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக வெளியேறியுள்ளார்கள். இந்த வெறியாட்டங்கள் அனைத்தும் பொலிசாரது முன்னிலையிலேயே நடைபெற்றது.

## 5.7.86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச் சோலை என்னும் இடத்தில் சிறிலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சு நடத்தியதில் 10க்கும் அதிகமான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். 15க்கும் அதிகமான வீடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின.

## 9.7.86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 96ம்கட்டை என்னும் இடத்தில் சிங்கள இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் சேர்ந்து வெறியாட்டம் நிகழ்த்தியதில் 6 பெண்கள் உட்பட 12 தமிழ் மக்கள் மிகக்கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

மேலும் 8 தமிழ் பெண்கள் மோசமாக காயமடைந்தார்கள்.

## 13.7.86

மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய 500க்கும் அதிகமான இராணுவத்தினர் அடம்பன் பகுதியில் வெறியாட்டம் நிகழ்த்தியதில் 20 இஸ்லாமிய தமிழ் மக்கள் உட்பட 40 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 15 வீடுகளும், 2 கடைகளும் இராணுவத்தினரால் சூறையாடப்பட்ட பின்னர் எரித்து சாம்பராக்கப்பட்டன.

## 15.7.86

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் பாவற்குளம் கிராமத்தில் 10ம் யூனிட்டில் வசித்துவந்த 10 தமிழ்மக்களை வெட்டிக் கொன்றார்கள்.

## 16.7.86

மூதூர் மாவட்டத்தில் உள்ள மணல்சேனை என்னும் இடத்தில் அமைந்திருந்த அகதிகள் முகாம் மீது இராணுவத்தினர் வெறித்தாக்குதல் நடத்தினார்கள். அங்கிருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரை நோக்கியும் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். 40 அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 3 தமிழ் கிராமங்கள் முற்றாக நாசமாக்கப்பட்டன. வேறு சில தகவல்கள் இறந்தவர்கள் தொகை 67 எனக் கூறுகின்றன.

## 17.7.86

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி எனும் தமிழ் கிராமமானது 300க்கும் அதிகமான இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவர்கள் அங்கிருந்த தமிழ் மக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இதனால் 7 தமிழ் மக்கள் அவ்விடத்திலேயே இறந்து போனார்கள்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை நோக்கி சிறிலங்கா விமானப் படையினருக்கு சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. இதன் காரணமாக 9 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

## 1.8.86

வவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 30க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

## 4.8.86

வவுனியா மாவட்டத்தில் உள்ள மரம்பைக்குளம் எனும் இடத்தில் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட வெறித்தனமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து அக்கிராமத்தில் இருந்த 70க்கும் அதிகமான தமிழ் குடும்பங்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறின. இப்பொழுது அக்கிராமமானது மயானம் போல் வெறிச்சோடிக் கிடக்கிறது.

## 9.8.86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முகாமைவிட்டு வெளியே வந்த இராணுவத்தினர் 13ம் காலனி என்னும் இடத்தில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த தமிழ் விவசாயிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

## 10.8.86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் எனும் இடத்தில் இருந்த அகதிகள் முகாம் ஒன்றினுள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த மக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இதனால் ஒருகுழந்தை உட்பட 4 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## 13.8.86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருக்கோணஸ்வரர் ஆலயத்தின்மீது சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த விமானம் ஒன்று குண்டு வீச்சு நடத்தியது. வரலாற்றுப்புகழ்மிக்க இந்த புராதன ஆலயத்தின் ஒருபகுதி சேதமடைந்தது. அங்கே வழிபாட்டுக்காக வந்திருந்த 7 தமிழ்மக்கள் கொல்லப்பட்டார்கள். இறந்தவர்களில் ஒருவர் பெண். ஒருவர் கோயில் அர்ச்சகர். 6 தமிழர்கள் படுகாயமடைந்தனர்.

## 22.8.86

திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள திருகோணமடு என்னும் கிராமத்தில் 10 தமிழ்மக்கள் சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

## 21.8.86

யாழ் மாவட்டத்தில் உள்ள கோட்டை இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட மோட்டார் குண்டு ஒன்று திருமண வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்தில் போய் விழுந்து வெடித்தது. மணமகன் பரிதாபமான முறையில் கொல்லப்பட்டார். 60 வயதான ஆசிரியர் ஒருவரும் காலமானார்.

## 23.8.86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாமாங்காடு என்னும் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர், அக்கிராமத்தைச் சேர்ந்த 500க்கும் அதிகமான தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக முகாமிற்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

## 24.8.86

யாழ் மாவட்டத்தில் உள்ள கோட்டை இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் மக்கள் வாழும் குடியிருப்புகளின் மீது மோட்டார் செல் தாக்குதல் மேற்கொண்டார்கள். 10 தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 15 தமிழர்கள் படுகாயமடைந்தார்கள்.

## 25.8.86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் எனும் இடத்தில் 6 தமிழ் மக்கள் பொலிஸ் கொமாண்டோக்களால் கைது செய்யப்பட்டு பின்னர் முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

## 27.8.86

கிளிநொச்சி இராணுவ முகாம்களில் இருந்து ஏராளமான வாகனங்கள் மற்றும் கவச வாகனங்களில் வெளியேறிய இராணுவத்தினர் கொக்காவில் எனும் இடத்தை நோக்கி சென்றார்கள். செல்லும் வழியில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## 30.8.86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனுராதபுரச் சந்தி என்னும் இடத்தில் சந்தேகத்தின் பெயரில் பெண்கள், குழந்தைகள் உட்பட 15 தமிழ்மக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள். பின்னர் இவர்களில் 9 பேர் எதுவித விசாரணையுமில்லாமல் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மீதி பேரையும் இராணுவத்தினர் ஊர்காவல் படையினரிடம் கையளித்தார்கள். இவர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை.



சமோரா மாஷேல்

மொசாம்பிக் தென்காசா மாகாணத்தின் சிறு கிராமமொன்றில், 1933 செப்டம்பர் 29ல், ஏழை விவசாயக் குடும்ப மொன்றில் பிறந்தார் சாமோரா மாஷேல். வறுமையின் காரணமாக தனது படிப்பை இடை நடுவில் நிறுத்திவிட்டு மொசாம்பிக்கின் தலைநகரான மாப்ரூவிற்கு சென்று மருத்துவ உதவியாளராக வேலையில் சேர்ந்தார். அக்கால கட்டத்தில் (1962) மொசாம்பிக்கின் விடுதலைப் போராட்டத்துக்கான "பிரலிமோ" கட்சியினை நடத்திக் கொண்டிருந்த தலைவர் மொன்ட்லேனை சந்தித்த இவர் 1963 -ல் அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அத்துடன் அல்ஜீரியாவுக்கு சென்று கெரில்லாப் போர்ப்பயிற்சியும் பெற்றார். தனது திறமையின் காரணமாக 1968ல் பிரெலிமோ இயக்கத்தின் ஆயுதப்படைகளுக்கான தளபதியானார். போர்த்துக்கீசருக்கு எதிராக மொசாம்பிக் விடுதலைப் போராட்டத்தை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்ற இவர் 1970 ல் அவ்வமைப்பின் தனித் தலைவரானார். தனது 10 வருடகால கெரில்லாப் போராட்டத்தின் மூலம் 1975 ல் மொசாம்பிக்கை சுதந்திர நாடாக்கினார். அன்று முதல் இன்றுவரை மொசாம்பிக் மக்களின் தனிப்பெருந்தலைவராக இருந்து நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்தார். ஒடுக்கப்படும் உலகமக்களுக்காக குரல் கொடுத்து, அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவளித்தார்.

அடக்கி ஒடுக்கப்படும் உலக மக்களின் விடுதலைக்காகப் போராடிய சாமோர்ரா மாஷேலின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. எம்மை விட்டுப் பிரிந்த தலைவர் சாமோரா மாஷேலுக்கு தமிழீழ மக்களின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றனர்.

தலைவனை இழந்து தவிக்கும் மொசாம்பிக் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

## மன்னாரில் விடுதலைப்புலிகள் — சிங்கள இராணுவம் நேரடி மோதல்! 28 கூலிப்படையினர் மரணம் — விடுதலைப்புலிகளின் பிராந்திய தளபதி விக்டர் — வீரமரணம்

அழகான தோற்றம்—சதா சிரிக்கும் கண்கள்—குழந்தையினுடையது போல் குதூகலிக்கும் மனம்—எவரையும் அணைத்துப் போகும் இயல்பு—உறுதியான உடல்வாகு—இவன்தான் 23 வயதுடைய விக்டர் எனப்படும் மருசலீன் பியூஸ்லஸ். எதிரிகளைச் சந்திக்கும்போது அவன் இறுகி, இரும்பாகி, நெருப்பாகி.... எரிப்பான்.

'மாதோட்ட'ப் பழம் மண்ணில் தமிழ் மக்களின் வீரம், காலத்தால் மெல்லக் கருவுற்று 'விக்டர்' ஆகப் பிறந்தது. திருநெல்வேலித் தாக்குதல், மன்னார் பொலிஸ் நிலையத்தாக்குதல் போன்ற வெற்றிகரமான களங்கள் பல கண்டான். களத்தில் முன்னின்று போரிடும் கெரில்லா வீரன் அவன். விடுதலைப் புலிகளின் மன்னார்ப் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினருமான லெபடினன்ட் கேணல் விக்டர் 12.10.86 அன்று அடம்பன் போர் முனையில் வீரமரணமடைந்ததை அறிந்து மன்னாரின் காய்ந்த மண்ணும் கசிந்தழுகிறது. தமிழீழம் சோகமயமாகிறது. அங்கு ஓடும் அருவியாற்றுடன் அவன் சிந்திய செங்குருதி கலந்து, கடலுடன் சங்கமமாகி விடுதலையாக உதயமாகும். உதயத்துக்கு முன் விடிவெள்ளியாய் மறைந்துபோன லெப்டினன்ட் கேணல் விக்டருக்கு எமது வீர வணக்கங்கள்.

12.10.86 ஞாயிறு அதிகாலை மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் கிராமத்தில் இனப்படுகொலையை மேற்கொள்ளும் பொருட்டு தள்ளாடி முகாமிலிருந்து புறப்பட்டு வந்த சிங்கள இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக தாக்கி அழித்துள்ளனர். சிங்கள கூலிப்படையினருடனான இந்த உக்கிரமான நேரடிச் சண்டையில் மன்னார்ப் பிராந்திய தளபதி விக்டர் தலைமையிலான விடுதலைப்புலிகள், புலிகளின் போர்முனை வரலாற்றிலேயே ஓர் புதிய சாதனையைப் படைத்துள்ளனர். பெருந்தொகையான கவச வண்டிகள், ஹெலிகப்டர்கள் சகிதம் இனப்படுகொலையை மேற்கொள்ள வந்தவர்கள், மக்கள் பாதுகாவலர்களான விடுதலைப்புலிகளால் முகாம்வரை ஓட, ஓட விட்டியடிக்கப்பட்டனர். ஒரு விமான ஓட்டி, ஒரு லெப்டினன்ட், உட்பட மொத்தம் 28 சிங்களக் கூலிப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நேரடி மோதலில் முதன் முறையாக விடுதலைப்புலிகள் 16 இராணுவத்தினரின் உடல்களைக் கைப்பற்றியுள்ளனர். இரு சிங்களப் படையினர் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளனர். ஏராளமான ஆயுத, வெடிமருந்து, இராணுவ தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

அவைகளின் விபரம் :

1. R.P.G.7 வெடிகுண்டு செலுத்தி — 1 (சீன தயாரிப்பு)
2. A.K.47 சுரிகுழல் துப்பாக்கிகள் — 15 (சீன தயாரிப்பு)
3. HK. MP.5 SD.3 உபஇயந்திர துப்பாக்கி — 1 (மேற்கு ஜேர்மன் தயாரிப்பு)
4. 52 m.m. கொமாண்டோ மோட்டார் — 1 (இங்கிலாந்து தயாரிப்பு)
5. 60 m.m. மோட்டார் — 1 (பாக்கிஸ்தான் தயாரிப்பு)
6. JR எறிகுண்டுகள் — 25
7. AK ரவைக்கூடுகள் — 43
8. RPD ட்ரம் ரவைக்கூடுகள் — 8
9. புகை எறிகுண்டுகள் — 3
10. பரசூட் கிளர்ஒளி — 2
11. கண்ணீர் புகை குண்டுகள் — 2
12. 7.62 ரவைகள் — 6000-க்கும் அதிகம்.
13. 52 m.m. மோட்டார் வெடிகுண்டுகள் — 6
14. 60 m.m. மோட்டார் வெடிகுண்டுகள் — 6
15. R.P.G. வெடிகுண்டு — 1
16. தலைக்கவசங்கள் — 25

இதே நேரம் இந்நேரடிச்சமரில் இராணுவத்துக்கு உதவுவதற்காக முருங்கன் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு வந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் உயிலங்குளம் எனும் இடத்தில் வைத்து வழிமறித்துத் தாக்கி விரட்டியடித்தனர். இதேபோல தள்ளாடி முகாமில் இருந்து புறப்பட்டவர்களும் முகாமுக்குள் விரட்டியடிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் மன்னார்ப் பிராந்திய தளபதியும், மன்னார் மாவட்ட மக்களின் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய வருமான விக்டர், 2-ம்லெப் ரோம் இருவரும் வீரமரணமடைந்தனர்.

போர்முனைக்குச் செல்லும் புலிகள்




உணவு உற்பத்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து விவசாய வேலைகளிலீடுபடும் புலிகள்.



# இனவெறிப் பிடிக்குள் இஸ்லாமியத் தமிழர்

அம்பாறை மாவட்டம் ஜனத்தொகை

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 81,762 | 30 | 1,44,779 | 37.2 |
| ஹிந்துக்கள் | 57,346 | 21 | 74,328 | 19.1 |
| முஸ்லிம்கள் | 1,26,033 | 46.2 | 1,61,754 | 41.6 |
| கிறிஸ்துவர்கள் | 7,625 | 2.8 | 7,665 | 2 |
| மற்றவர்கள் | 24 | — | 261 | — |
| | 2,72,790 | 100 | 3,88,786 | 100 |




இலங்கையின் இனவாத பாசிச அரசானது தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர், இந்தியத்தமிழர், முஸ்லிம்கள் என பிரித்தாள முயல்வதுடன், அவர்களுக் கிடையில் கலவரங்களை மூட்டவும், கசப்புணர்வுகளை வளர்க்கவும் முற்படுகிறது. அதே வேளை தீவின் மொத்தச் சனத்தொகையில் தமிழ் பேசும் மக்கள் மிகக்குறைந்த சதவீதமே எனப் பிரித்துக் காட்டவும் முனைகிறது. 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தீவின் சிங்களவர் தொகை 10,935,666 (74%). தமிழ் பேசும் மக்கள் தொகை 3,753,742 (25.3%). ஆனால் இந்தியத் தமிழர் 5.6%, முஸ்லிம்கள் 7.1%, இலங்கைத் தமிழர் 12.6% எனும்போது தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான வலிமையின் முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. இத்தகைய தந்திரத்திற்கு தமிழ் பேசும் மக்களிடையே உள்ள துரோகத் தலைமைகள் சில பதவிகள், சலுகைகளுக்காக துணை போகின்றன. தென்னிலங்கை இஸ்லாமியத் தலைமைகள் வடக்கு, கிழக்கில் உள்ள இஸ்லாமியத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறமுடியாது. இஸ்லாமியத் தமிழர்களிடையே உள்ள 5% பணக்கார வர்க்கத்தின் பிரதிநிதிகளாகிய இவர்கள் சிறு தொழில்களும், விவசாயமும் புரியும் ஏழை இஸ்லாமிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது இல்லை. கடந்த ஐம்பது வருடகாலத்தில் தீவின் கிழக்கில் இருந்து இஸ்லாமியப் பிரதிநிதி எவரும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. முஸ்லிம் நாடுகளின் உதவிகளைப் பெற பணக்கார வர்க்க நலன்களைப் பேணும் ஒரு சிலருக்கு கண்துடைப்பாக பதவிகளைக் கொடுத்து இஸ்லாமிய மக்களின் பிரதிநிதிகள் என்று உலகை ஏமாற்றுகிறது சிங்கள அரசு. மூன்றாக பிரிப்பதே ஒவ்வொன்றாக அழிக்கத்தான் என்பதை தமிழீழக் குழந்தைகளே புரிந்துகொள்வார்கள். சுதந்திரப் போராட்டம் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களாலும் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்று. அப்போதுதான் அனைவரும் அடக்குமுறையாளனிடமிருந்து விடுதலை பெற முடியும்.

சிங்கள இனவாதம் பிரித்தழிக்க நினைக்கும் இஸ்லாமியத் தமிழரின் அவலநிலையினை சற்றுப் பார்ப்போம். 1948ம் ஆண்டு வெள்ளையர் ஆட்சியின் வெளியேற்றத்தின் பின் சிங்கள அரசு படிப்படியாக வர்த்தகத் துறையில் தனது



ஆதிக்கத்தை விசாலப்படுத்தத் தொடங்கியது. அரசு கூட்டுறவுக்கடைகளும், மொத்த விற்பனை நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் 70% அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. அரசுடமை எனும் போது சிங்கள முதலாளித்துவ உடமை என்பதே பொருள். இன்று இஸ்லாமியத் தமிழர்களின் கையில் 3% வர்த்தகம் கூட இல்லை. அரசு கூட்டுத்தாபனங்களின் 4% வேலை வாய்ப்பையே இஸ்லாமிய மக்கள் பெற்றிருக்கின்றனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் இவர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டனர்.



வாக்காளர்களின் எண்ணிக்கை

| வருடம் | முஸ்லிம்கள் | அதிகரிப்பு | சிங்களவர் | அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| 1947 | 37,000 | — | 2,394 | — |
| 1952 | 42,000 | 13% | 3,119 | 30% |
| 1956 | 44,000 | 5% | 3,905 | 25% |
| 1960 | 52,000 | 9% | 23,000 | 500% |
| 1965 | 57,000 | 9% | 31,000 | 35 |
| 1970 | 62,000 | 9% | 39,000 | 36 |
| 1977 | 68,000 | 10% | 46,000 | 13% |
| 1980 | 78,000 | 14% | 68,000 | 48% |

கல்வித்துறையில் இஸ்லாமியத்தமிழர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இவர்களது பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. 683 இஸ்லாமியப் பாடசாலைகளில் 3822 ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. கட்டிடங்கள், தளபாடங்கள், விஞ்ஞான கூடங்கள், நூல் நிலையங்கள் போன்ற அத்தியாவசிய வசதிகள் மிகமிகக் குறைவு. பல்கலைக்கழக அனுமதியில் இஸ்லாமியத் தமிழர்களின் தொகை 3.8% ஆக இருக்கின்றது. பாதுகாப்பு படைகளிலும், பொலிஸ் படையிலும் இஸ்லாமிய மக்கள் ஒரு சதவீதமும் இல்லை. இலங்கை அரசு சிங்களக் குடியேற்றங்கள் மூலம் இஸ்லாமிய மக்களை அவர்களது நிலங்களில் இருந்து விரட்டி வருகிறது. தமது நிலங்களிலேயே சிறுபான்மையினராகி, தனித்தன்மையை இழந்து பேரினவாதம் புரியும் கலாச்சாரப் படுகொலை, இனப்படுகொலை ஆகியவற்றின் விளைவால் அழிந்து போகும் ஆபத்தான நிலையை இஸ்லாமிய மக்கள் அடைந்துள்ளனர்.

அம்பாறை சிங்கள மாவட்டமாக மாறிக்கொண்டிருக்கிறது. அங்கு நடந்த நிலப்பறிப்புகளில் சில :—

அக்கரைப்பற்றில் இருந்து 5 மைல் தொலைவில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1450 ஏக்கர் காட்டைத் திருத்தி நெல்காணிகளாக்கினர் இஸ்லாமிய மக்கள். எவ்வித முன்னறிவித்தலோ, நஷ்டஈடோ இன்றி அம்மண்ணின் மக்களைப் பலவந்தமாகக் கலைத்துவிட்டு அக்காணிகளைச் சீனிக்கூட்டுத்தாபனத்திடம் கையளித்தது சிங்கள அரசு. பின்னர் அக்காணிகளில் வெளிமாவட்டங்களில் இருந்து சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றியது.

இதே போன்று அம்பலத்தாறு, சேனைவட்டம், பொன்னன்வெளி, சோனவட்டை, கொண்டை வெட்டுவான் போன்ற பல கிராமங்களில் காடுகளை வெட்டி அபிவிருத்தி செய்த 7,000க்கு அதிகமான காணியில் இருந்து இஸ்லாமிய மக்களை அடித்து விரட்டி அக்காணிகளை அரசாங்கம் அபகரித்துக் கொண்டது.

1982 ஜனவரியில் பொத்துவில்லுக்கு அண்மையில் அறுகம்பை, உல்லை ஆகிய குடியேற்றத்திட்டங்களில் சட்டபூர்வமாகக் குடியேறிய இஸ்லாமியத் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர்.

பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எவ்வாறு இஸ்லாமியத் தமிழரின் நிலம் பறிபோகிறது என்பதற்கு அம்பாறையில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் நல்லதொரு உதாரணமாகும். 1956ல் இருந்து 1960 வரை இஸ்லாமியத் தமிழர்களின் வாக்காளர் தொகை 44,000ல் இருந்து 52,000 ஆக 9% அதிகரித்த வேளை சிங்கள வாக்காளர்களின் தொகை 3905ல் இருந்து 23,000 ஆக 500% அதிகரித்தது.

திருகோணமலை மாவட்டத்திலும் இதே கதைதான். 1952-1954ம் ஆண்டுகளில் கந்தளாய், அல்லை குடியேற்றத் திட்டங்களின்கீழ் தம்பலகாமப்பகுதியில் இருந்த 4,000ம் ஏக்கர் விவசாயக் காணியில் இருந்து இஸ்லாமிய மக்கள் துரத்தப்பட்டு, வெளி மாவட்டச் சிங்களவர் அங்கு குடியமர்த்தப்பட்டனர். விரட்டப்பட்ட அம்மக்கள் கிண்ணியாவுக்கு அருகில் இருந்து காடுகளை வெட்டி 10,000 ஏக்கர் விவசாயக் காணிகளை ஏற்படுத்தினர். 1967ம் ஆண்டு அங்கிருந்தும் அவ்விவசாய மக்கள் கலைக்கப்பட்டனர். இதனை இஸ்லாமிய மக்கள் எதிர்த்தபோது வனலை பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டு பொலிசாரின் பாதுகாப்புடன் சிங்கள குடியேற்றம் தொடர்ந்தது.

பதவியாக் குடியேற்றத்திட்டத்தின்படி உருவான காணிகளில் திருகோணமலை மாவட்டத்துள் இருந்தவை முழுவதிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இதே வேளை சிங்களப் பகுதிகளில் நடப்பவற்றை அவதானித்தால் இனவாத அரசின் முகத்திரை கிழியும். சிங்கள பௌத்த வெறிக் கொடூரம் தாண்டவமாடும் முகம் அங்கு வெளிப்படும். எம்பிலிப்பிட்டிய, செவனகல சீனி அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்களை விரட்டியடிக்காது வேறு இடங்களில் மாதம் 550 மானியத்துடன் தற்காலிகமாக குடியேற்றினர். அங்கிருந்த காணிகள் திருத்தியமைக்கப்பட்ட பின்பு அம்மக்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர்வரை காணிகள் வழங்கப்பட்டன. அதுதவிர 1 ஏக்கர் மேட்டு நிலக் காணியும் கொடுக்கப்பட்டு, குடியிருக்க வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

பௌத்த மதத்தின் பேரிலும், இஸ்லாமியத் தமிழரின் காணிகள் பறிக்கப்படுகின்றன. 1984 தை 1ம் திகதியிட்ட 'சிலுமின' என்னும் சிங்களப்பத்திரிகை செய்தியொன்று வெளியிட்டது. தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 273 பௌத்த சின்னங்களை புதைபொருள் ஆணைக்குழு அகழ்ந்து எடுத்துள்ளது: அவற்றைப் புனரமைத்துப் பாதுகாக்க பௌத்த குருமாரும், சிங்கள மக்களும் அவ்விடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்பதே அச்செய்தியாகும்.

அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமியத் தமிழர் வாழும் பகுதிகளில் மாத்திரம் 43 பௌத்த சின்னங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது.

இத்தகைய சின்னங்கள் கிடைத்ததாக கதையைக் கட்டிவிட்டு அவ்விடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து பௌத்த குருமார்களையும், சிங்கள மக்களையும் வரவழைத்து அவ்விடத்தை பௌத்த பூமியாக்குவதுதான் இத்திட்டத்தின் நோக்கம்.. மத ரீதியான குடியேற்றத்திற்கு ஒரு சிறு உதாரணம் தீகவாபி விகாரையாகும். அம்பாறை மாவட்டத்தில் பாழடைந்த இவ்விகாரைக்கு ஒரு பௌத்த பிக்கு வந்தார். அவருக்குத் தானம் வழங்கி உதவினர். 1960ம் ஆண்டளவில் சில பௌத்த பிரமுகர்கள் விகாரையும், அதனைச் சூழ்ந்த காணிகளும் பௌத்த மத வளர்ச்சிக்காக அரசால் சுவிகரிக்கப்படவேண்டும் என்று கூறினர். அதனைத் தொடர்ந்து விகாரையைச் சூழ்ந்த காணிகள் அரசால் சுவிகரிக்கப்பட்டு அங்கிருந்த இஸ்லாமிய மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

பாலஸ்தீனத்தில் காஸா, ஜோர்தானின் மேற்குக் கரை ஆகிய பகுதிகளில் இருந்து பாலஸ்தீனியரை விரட்டிவிட்டு யூதரைக் குடியேற்ற இத்தகைய முறைகளையே இஸ்ரேல் அரசு கைக்கொள்கிறது. பாலஸ்தீனியர்களை அழிக்கப் பயன்படும் யூத மூளையும், ஆயுதங்களும் இங்கு இஸ்லாமிய மக்களை அழிக்க இஸ்ரேலால் வழங்கப்படுகிறது.

பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் இஸ்லாமியத் தமிழர்களையும் இனவாத அரசு விடவில்லை. கிழக்கு மாகாணத்தில் கல்லோயா, சேனநாயக்க சமுத்திரம், அம்பலம் ஓயாக்குளம், தாவலடி, புடவைக்கட்டு, புல்லைக்குடா ஆகிய பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்த, இஸ்லாமியத் தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றிவருகிறது. சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவும், அவற்றிற்கு பாதுகாப்பளிக்கவும், அம்மண்ணுக்குரியவர்களை வெளியேற்றவும் பொலிஸ், ஆயுதப்படைகள் இருக்கின்றன. கல்லோயா, பதவியா, அல்லை, கந்தளாய் திட்டங்களினால் ஏற்பட்ட சிங்களக்குடியேற்றங்களால் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தொகுதியும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறைத் தொகுதியும் ஆக இரண்டு சிங்களத் தொகுதிகள் ஏற்பட்டன. குடியேற்றங்களால் இந்த இரண்டு மாவட்டங்களிலும் 65 வீதமான காணிகள் சிங்கள மயமாக்கப்பட்டன. தீவு முழுவதும் சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அந்நோக்கம் ஈடேறவிடாமல் தடுப்பவர்களை, எதிர்ப்பவர்களை அழிக்க வேண்டும். இதுதான் இலங்கை அரசின் கொள்கை. எதிர்க்கின்ற மக்கள் அனைவரினதும் உயிர்களைப் பறித்தாவது தனது பாசிசக் கொள்கையை நிறைவேற்றவேண்டும் என எண்ணுகிறது இனவாத ஆட்சி. பல சந்தர்ப்பங்களில் இஸ்லாமியத் தமிழ்மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. 1974ம் ஆண்டு மகியங்கனையில், பங்கரகம எனும் இஸ்லாமியத் தமிழரது கிராமம் சிங்களக் காடையரால் அழிக்கப்பட்டது. 1976ம் ஆண்டு புத்தளம் ஜும்மா மசூதியின் உள்ளே தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 7 இஸ்லாமியத் தமிழர்கள் அரச ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டனர்.

1983ம் ஆண்டு கலவரத்தின்போது 2வது கட்டமாக இஸ்லாமியத் தமிழர்களை பெரிய அளவில் தாக்கியழிக்கும் திட்டமும் சிங்கள ஆட்சியாளரின் குண்டர் படையினரிடம் இருந்தது. ஆனால் ஏதோ காரணத்தினால் அது நடைபெறவில்லை. ஆயினும் அக்கலவரத்தின்போது சுமார் 26 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களை இஸ்லாமியத்தமிழர்கள் இழந்தனர். பலர் சிங்கள இனவாதிகளால் கொல்லப்பட்டனர். 350ற்கு கூடுதலான இஸ்லாமியத் தமிழர்களது வீடுகளும், வியாபார நிலையங்களும் கொள்ளையடிக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டன. சமீப காலங்களில் இஸ்லாமியத் தமிழருக்கு எதிரான வன்செயல்கள் அலுத்கம, பாணந்துறை, நொச்சி யாகம, நிக்கவரட்டியா, அத்துலுகம ஆகிய இஸ்லாமியக் கிராமங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

கடந்த 13-7-86ம் திகதி மன்னார் மாவட்டத்தில் அடம்பன் கிராமத்தில் 10 இஸ்லாமியத் தமிழர்கள் இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு இரையாக்கப்பட்டனர்.

சிங்கள மொழியை இஸ்லாமியத்தமிழரின்மேல் திணிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. இஸ்லாமியத் தமிழர்கள், அவர்களது தாய்மொழியாம் தமிழிருக்க சிங்களத்தைப் பயிலுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். 60% தமிழ் பேசும் மக்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் நிர்வாகமும், பதிவுகளும் சிங்கள மொழியிலேயே நடைபெறுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் உள்ள 12 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் 6 இஸ்லாமியத் தமிழர்களது பிரிவுகளாகும். தமிழ் தெரியாத சிங்கள உதவி அரசாங்க அதிபர்களே இவைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் சிங்களம் பேசத் தெரியாத இஸ்லாமியத் தமிழர்கள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல.

இன்று அமுலில் உள்ள விகிதாசார தேர்தல் முறையில் 12.5%க்கு குறைவான வாக்குகளைப் பெறும் எந்த அரசியல் கட்சியோ அல்லதுதனிக்குழுவோ நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற முடியாது. 14.4% ஆக வன்னி, 41.6% ஆக அம்பாறை, 24.1% ஆக மட்டக்களப்பு, 29.5% ஆக திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழுகின்ற இஸ்லாமியத் தமிழர்கள் மாத்திரமே தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்புடையவர்கள். செறிவின்றி மற்ற மாவட்டங்களில் வாழும் இஸ்லாமியத் தமிழ் மக்கள் இம்முறை காரணமாக கணிசமான பிரதிநிதித்துவத்தை இழக்கின்றனர். மேலே கூறிய 4 மாவட்டங்களில்கூட குடியேற்றவாதிகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து அரசு திட்டமிட்டுச் செய்யும் குடியேற்றங்கள் இஸ்லாமிய மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு ஆபத்தை காலப்போக்கில் ஏற்படுத்தப்போகின்றன.

சிங்கள இனவாத பாசிச ஆட்சியின் நடைமுறைகள், இஸ்லாமியத் தமிழ் மக்களுக்கு தமிழீழமே பாதுகாப்பு என்பதை வலியுறுத்துகின்றன. சமத்துவ சமுதாயத்தை உள்ளடக்கிய தமிழீழத்தை உருவாக்குவதில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அடிமைப்பட்ட மக்களின் ஒன்றுதிரண்ட போராட்டமே விடுதலையைப் பெற்றுத் தரும் என்பதை இஸ்லாமியத் தமிழ் மக்கள் உணர்ந்து போராட்ட ஓட்டத்தில் தங்களை மேலும் மேலும் இறுக்கமாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

ஆதாரம் :— எம்.ஐ.எம். முஹியத்தீன்

# போர்முனையில் புலிகள்



| ..ம் | நாள் | தாக்குதல் விபரம் | விளைவு |
|---|---|---|---|
| ர<br>ம்<br>ம் | 30.7.86 | இராணுவமுகாம் மீது எமது கெரில்லாக்கள் பதுங்கித்தாக்குதல் மேற்கொண்டனர். | 7 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள். 2 புலிகள் வீரமரணமடைந்தனர். |
| ளப்பு<br>ம் | 31.7.86 | பொலிஸ் கொமாண்டோக்களுக்கும் எமக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்றது. | 3 பொலிஸ் கொமாண்டோக்கள் மாண்டு போயினர். |
| ணமலை<br>ம்<br>ச்சான் | 1.8.86 | இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த இராணுவத்தினர் மீது எம்மவர்கள் முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் வைத்து கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டார்கள். | 4 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். |
| ாப்பு<br>ம் | 4.8.86 | அப்பாவித் தமிழ் மக்களை துன்புறுத்திக் கொண்டிருந்த ஊர்காவல் படையினர் எமது தாக்குதலுக்கு இலக்காகினர். | 3 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். 3 வேட்டைத்துப்பாக்கிகள், 100க்கும் அதிகமான தோட்டாக்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. |
| ணமலை<br>ம் | 5.8.86 | தமிழ் மக்களது சொத்தை சூறையாடிக் கொண்டிருந்த ஊர்காவல் படையினரை நோக்கி எம்மவர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார்கள். | ஊர்க்காவல் படையினரில் ஒருவர் அவ்விடத்திலேயே மாண்டுபோனார். துப்பாக்கிகள், தோட்டாக்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. |
| ாமலை<br>ம்<br>சூலை | 5.8.86 | சரக்கேற்றுவதற்காக வந்த புகைவண்டிக்கு பாதுகாப்பளித்துக் கொண்டிருந்த இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும்எமது தாக்குதலுக்கு உள்ளாகினர். | 7 இராணுவத்தினரும், 5 சிங்கள ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர். 10 புகையிரதப் பெட்டிகள் சேதமடைந்தன. |
| | 6.8.86 | இராணுவ முகாமைவிட்டு வெளியே வந்த இராணுவத்தினர் மீது தாக்குதல். | இராணுவத்தினர் பின்வாங்கி முகாமிற்குச் சென்றார்கள். |
| ட்டம்<br>ற | 6.8.86 | இராணுவ முகாம் மீது எம்மவர்கள் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டார்கள். | இராணுவத்தினர் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டன. முகாம் கட்டிடம் ஒன்றும் சேதமடைந்தது. |
| ாமலை<br>ம்<br>சான் | 9.8.86 | முகாமைவிட்டு வெளியே வந்த 40க்கு அதிகமான இராணுவத்தினர் மீது எம்மவர்கள் தாக்குதல். | 10 இராணுவத்தினர் பலியாகினர் கவசவாகனம் ஒன்று முற்றாக நாசமாகியது. |
| ாமலை<br>ம் | 9.8.86 | முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மேல் எமது கெரில்லாக்கள் பதுங்கித் தாக்குதல் மேற்கொண்டார்கள். | 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். |
| ம் | 10.8.86 | இராணுவமுகாம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டனர். | பல இராணுவத்தினர் காயமடைந்தனர். |
| மலை | 11.8.86 | 13ம் கட்டை இராணுவ முகாமில் இருந்து வெளிவந்த 70க்கும் அதிகமான இராணுவத்தினரை எம்மவர்கள் எதிர் கொண்டார்கள். | இம்மோதலில் 3 இராணுவத்தினர் இறந்தனர். |

| இடம் | நாள் |
|---|---|
| திருகோணமலை மாவட்டம் | 12.8.86 |
| திருகோணமலை மாவட்டம் மொறவேவா | 14.8.86 |
| திருகோணமலை மாவட்டம் | 15.8.86 |
| அம்பாறை மாவட்டம் திருக் கோயில் | 19.8.86 |
| அம்பாறை மாவட்டம் பொத்துவில் | 19.8.86 |
| மூதூர் | 19.8.86 |
| யாழ் மாவட்டம் பருத்தித்துறை | 20.8.86 |
| யாழ் மாவட்டம் | 20.8.86 |
| யாழ் மாவட்டம் பருத்தித்துறை | 21.8.86 |
| மன்னார் மாவட்டம் மடுரோட் சந்தி | 21.8.86 |
| மட்டக்களப்பு மாவட்டம் ஏறுவூர் | 24.8.86 |
| மட்டக்களப்பு மாவட்டம் மொறக்கொட்டான் சேனை | 24.8.86 |
| மட்டக்களப்பு மாவட்டம் ஏறுவூர் | 24.8.86 |
| கிளிநொச்சி மாவட்டம் கனகபுரம் | 24.8.86 |
| கிளிநொச்சி மாவட்டம் | 25.8.86 |
| வவுனியா மாவட்டம் மாமடு | 25.8.86 |
| கிளிநொச்சி மாவட்டம் | 25.8.86 |
| மட்டக்களப்பு மாவட்டம் கிரான். | 25.8.86 |
| கிளிநொச்சி மாவட்டம் பனிச்சன் குளம் | 27.8.86 |
| மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை | 27.8.86 |
| மன்னார் மாவட்டம் தள்ளாடி | 28.8.86 |
| திருகோணமலை மாவட்டம் மிகுந்தபுரம் | 30.8.86 |
| மன்னார் மாவட்டம் | 30.8.86 |
| யாழ் மாவட்டம் வசாவிளான் | 31.8.86 |
| திருகோணமலை மாவட்டம் டபிள்மலை. | 31.8.86 |

# பில் புலிகள்



| | விளைவு |
|---|---|
| ன் பதுங் | 7 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டார்கள். 2 புலிகள் வீரமரணமடைந்தனர். |
| க்கும் | 3 பொலிஸ் கொமாண்டோக்கள் மாண்டு போயினர். |
| ந்த இராணு ந்து 500 ாக்குதல் | 4 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர். |
| காண்டிருந்த டி இலக்கா | 3 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர் 3 வேட்டைத் துப்பாக்கிகள், 100க்கும் அதிகமான தோட்டாக்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. |
| காண்டி ம்மவர் ார்கள். | ஊர்க்காவல் படையினரில் ஒருவர் அவ்விடத் திலேயே மாண்டுபோனார். துப்பாக்கிகள், தோட்டாக்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. |
| பாதுகாப் நம், ஊர்காவல் கினர். | 7 இராணுவத்தினரும், 5 சிங்கள ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர். 10 புகை யிரதப் பெட்டிகள் சேதமடைந்தன. |
| இராணு | இராணுவத்தினர் பின்வாங்கி முகாமிற்குச் சென்றார்கள். |
| டார் | இராணுவத்தினர் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டன. முகாம் கட்டிடம் ஒன்றும் சேத மடைந்தது. |
| தக தாக்குதல். | 10 இராணுவத்தினர் பலியாகினர் கவசவாகனம் ஒன்று முற்றாக நாசமாகியது. |
| ர் மேல் | 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். |
| தாக் | பல இராணுவத்தினர் காயமடைந்தனர். |
| வெளிவந்த ம்மவர்கள் | இம்மோதலில் 3 இராணுவத்தினர் இறந்தனர். |

| இடம் | நாள் | தாக்குதல் விபரம் | விளைவு |
|---|---|---|---|
| திருகோணமலை மாவட்டம் | 12.8.86 | பல்வேறு இராணுவமுகாம்களில் இருந்து வெளியே வந்த 200க்கும் அதிகமான இராணுவத்தினரை, பல இடங்களில் புலிகள் இடைமறித்து தாக்குதல் தொடுத்தார்கள். 4 குண்டுவீச்சு விமானங்கள், 1 கடல் விமானம் மற்றும் 1 ஹெலிகொப்டர் முதலியவை இராணுவத்தினருக்கு உதவியாக நட வடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. | புலிகளது தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாம்களுக்குப் பின் வாங்கினர். 3, M 203 கிறனேட் லோஞ்சர் துப்பாக்கிகள் எம்மால் கைப்பற்றப் பட்டன |
| திருகோணமலை மாவட்டம் மொறவேவா | 14.8.86 | மொறவேவா இராணுவமுகாமில் இருந்து புறப் பட்ட இராணுவத்தினர் மேல் எமது கெரில்லாக்கள் பதுங்கித் தாக்குதல் மேற்கொண்டார்கள். | 6 சிங்கள அரசபடையினர் இறந்தனர். |
| திருகோணமலை மாவட்டம் | 15.8.86 | ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டி ருந்த இராணுவத்தினர் மீது எமது கெரில்லா வீரர்கள் கண்ணி வெடி தாக்குதல். | 12 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர். |
| அம்பாறை மாவட்டம் திருக்கோவில் | 19.8.86 | ரோந்து சுற்றிக் கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடர் மீது எமது வீரர்கள் கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொண்டனர். | 5 இராணுவத்தினர் பலியாகினர். ஜீப்வண்டி ஒன்று சேதமடைந்தது. |
| அம்பாறை மாவட்டம் பொத்துவில் | 19.8.86 | பொத்துவில் இராணுவ முகாமிற்கு அருகில் இராணுவ வாகனத்தொடர் ஒன்று புலிகளது கண்ணிவெடியில் சிக்குண்டது. | 7 இராணுவத்தினர் மாண்டனர். கவச வாகனம் ஒன்று முற்றாக நாசமாகியது. |
| மூதூர் | 19.8.86 | ஊர்காவல் படையினருக்கு பொறுப்பாக இருந்தவர் எமது துப்பாக்கிச் சூட்டில் பலியானார். | |
| யாழ் மாவட்டம் பருத்தித்துறை | 20.8.86 | இராணுவத்தினர் மீது பதுங்கிச் சூடு நிகழ்த்தப்பட்டது | இராணுவ வீரர் ஒருவர் பலியானார். |
| யாழ் மாவட்டம் | 20.8.86 | கோட்டை இராணுவ முகாமில் இருந்து வெளியே வரமுயன்ற இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டது. | பின்வாங்கி முகாமிற்குச் சென்றார்கள் |
| யாழ் மாவட்டம் பருத்தித்துறை | 21.8.86 | இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத் தினருக்கும் எமக்கும் இடையே மோதல். | 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். |
| மன்னார் மாவட்டம் மடுரோட் சந்தி | 21.8.86 | இராணுவத்தினருடன் கடும் மோதல் | 6 இராணுவத்தினர் மரணம். கவசவாகனம் ஒன்று நாசமாகியது. |
| மட்டக்களப்பு மாவட்டம் ஏறூர் | 24.8.86 | பொலிஸ்நிலையத்திற்கருகே கொமாண்டோ பொலி சாருடன் கடும் மோதல் | பொலிசார், பொலிஸ்நிலையத்திற்குப் பின் வாங்கிச் சென்றார்கள். |
| மட்டக்களப்பு மாவட்டம் மொறக்கொட்டான் சேனை | 24.8.86 | புகைவண்டியில் வந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் | பின்வாங்கிச் சென்றார்கள் |
| மட்டக்களப்பு மாவட்டம் ஏறூர் | 24.8.86 | இராணுவ முகாமில் இருந்து வெளியே வரமுயன்ற இராணுவத்தினர் மீது எமது வீரர்கள் தாக்குதல் மேற்கொண்டார்கள். | இராணுவத்தினர் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றார்கள். |
| கிளிநொச்சி மாவட்டம் கனகபுரம் | 24.8.86 | இராணுவத்தினருக்கும் எமது வீரர்களுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிக் கொப்டர்களும் இராணுவத்தினருக்கு உதவியாக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. | எமது தாக்குதலை சமாளிக்க முடியாத இராணு வத்தினர் பின்வாங்கி விட்டார்கள். |
| கிளிநொச்சி மாவட்டம் | 25.8.86 | இராணுவ முகாமில் இருந்து 13 வாகனங்களில் கணேசபுரம், திருக்கோவில், பகுதிகளினூடாக முன்னேறி வந்த இராணுவத்தினரை புலிகள் பல இடங் களில் வழி மறித்து தாக்கினார்கள். ஹெலிகாப்டர் ஒன்றும், குண்டுவீச்சு விமானம் ஒன்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது. | 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். ஏராளமான ஆயுதங்கள் எம்மால் கைப் பற்றப்பட்டன. எமது தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவத்தினர் முகாம்களுக்குப் பின்வாங்கிச் சென்றார்கள். |
| வவுனியா மாவட்டம் மாமடு | 25.8.86 | சிங்கள கிராமமான இங்கு இராணுவத்தினர் மேல் எம்மால் கண்ணிவெடித் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. | 6 இராணுவத்தினர் மாண்டுபோயினர் மற்றும் 6 பேர் காயமடைந்தனர். |
| கிளிநொச்சி மாவட்டம் | 25.8.86 | இராணுவமுகாம் மீது எம்மால் மோட்டார் தாக் குதல் மேற்கொள்ளப்பட்டது. | பல இராணுவத்தினர் காயமடைந்தனர். |
| மட்டக்களப்பு மாவட்டம் கிரான். | 25.8.86 | கால்நடையாக வந்த பொலிஸ் கொமாண்டோக் கள் எமது துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாகினர். | 4 பொலிஸ் கொமாண்டோக்கள் ஸ்தலத் திலேயே கொல்லப்பட்டனர். |
| கிளிநொச்சி மாவட்டம் பளிச்சை குளம் | 27.8.86 | இராணுவமுகாமில் இருந்து வெளிவந்த இராணு வத்தினர் மீது எமது கெரில்லாக்கள் பதுங்கித் தாக்குதல் மேற்கொண்டனர். | 3 இராணுவத்தினர் மாண்டனர். |
| மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை | 27.8.86 | பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேவர முயன்ற பொலிஸ் கொமாண்டோக்கள் எமது தாக்குதலுக்கு உள்ளாகினர். | பொலிஸ் கொமாண்டோ ஒருவர் கொல்லப் பட்டார். ஏனையவர்கள் பொலிஸ் நிலையத்திற்குப் பின்வாங்கி சென்றுவிட்டனர். |
| மன்னார் மாவட்டம் தள்ளாடி | 28.8.86 | தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த இராணுவத்தினருடன் எம்மவர்கள் மோதினர் | இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றார்கள். |
| திருகோணமலை மாவட்டம் மிருந்தபுரம் | 30.8.86 | கன்னியா இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த இராணுவத்தினர்மேல் எமது கெரில்லாக்கள் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டனர். | 9 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே இறந் தார்கள். கவசவாகனம் ஒன்றும் சேதமடைந்தது. |
| மன்னார் மாவட்டம் | 30.8.86 | ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண் டிருந்த பொலிஸ் கொமாண்டோக்கள் எம்மால் தாக்கப்பட்டார்கள். | 10 பொலிஸ் கொமாண்டோக்கள் கொல்லப் பட்டனர் |
| யாழ் மாவட்டம் வசாவிளான் | 31.8.86 | வசாவிளான் பாடசாலை முகாமில் இருந்து முற்றாக வெளியேறிய இராணுவத்தினர் திரும்பவும் அங்கே வர முயன்றபோது எமது வீரர்கள் எதிர்கொண்டு தாக்கினர். | இராணுவத்தினர் பலாலி முகாமிற்கு பின்வாங்கினர் |
| திருகோணமலை மாவட்டம் டபிள்மலை. | 31.8.86 | பொலிசார் மேல் எமது வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். | 2 பொலிசார் ஸ்தலத்திலேயே பலியாகினர் மேலும் 4 பேர் காயமடைந்தனர். |

# கடல் நடுவே ஒரு களம்

தமிழீழத்தின் நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் தமிழர் வாழ்வுக்கான போர் நடைபெறுகிறது. நீலக் கடற்பரப்பு சூரிய ஒளியினால் மட்டுமல்ல: எம்மவர்கள் சிந்திய ரத்தத்தாலும் சிவக்கிறது. தமிழர்களுக்காக சுதந்திர நாட்டைப் படைக்கும் லட்சியக் கனவுடன் கடலோடும் 'கடற்புலிகளின்' வாழ்வில் ஒருநாள்...



1. தமிழீழத்தின் நாகர்கோவில் கடற்கரைப் பிரதேசம் 19-03-85. ஆறு இளம் விடுதலைப்புலிகள் படகில்-ஒருபுறம் நீச்சற்பயிற்சிக்கான உபகரணங்கள். மறுபுறம் கடற்படையினர் வந்துவிட்டால் அவர்களை எதிர்கொள்வதற்காக தயார் நிலையிலுள்ள ஆயுதங்கள். தொலைக்காட்டியினூடாக கடற்படையினரின் நடமாட்டத்தை அவதானித்த வண்ணம் புலிகளின் பயிற்சிக்கான பயணம் தொடர்கிறது.
2. கண்ணுக்குக் கரை எட்டாத, ஆழ் கடல் பிரதேசம். கடற்படையின் நடமாட்டம் எதுவும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின் படகு நிறுத்தப்படுகிறது. விடுதலைப்புலிகள் குதூகலத்துடன் தமது கடற்பயிற்சியை ஆரம்பிக்கின்றனர்.
3. தூரத்தில் கரும்புள்ளியாக தெரிகிறது ஒரு சிறிலங்கா விமானப்படை விமானம். அதனைத் தொடர்ந்து மேலும் 2 ஹெலிகொப்டர்கள் ஒரு கடல் விமானம் அவைகள் படகை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கின்றன. பயிற்சியைக் கைவிட்டு உஷாராகின்றனர் விடுதலைப் புலிகள்.
4. ஹெலிகொப்டர்கள் படகை அண்மித்து விட்டன. சுமார் 150 அடி உயரத்தில் பறந்தவண்ணம் அவைகள் தாக்குதல்களை தொடர்கின்றன. எதிரிகளின் இயந்திரத்துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ஒளிர்வுத் துப்பாக்கி ரவைகள் நெருப்புக்கணலைக் கக்கியவாறு படகை நோக்கி சீறிக் கொண்டிருக்கின்றன.
5. படகோட்டி துரிதமாக செயற்படுகிறார். படகின் இயக்கத்தை ஆரம்பித்து வேகத்தை அதிகப்படுத்திய அவர் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து படகை காப்பாற்றும் நோக்குடன் அதனை லாவகமாக அங்கும், இங்கும் ஓட்டுகிறார். இதே வேளை குழுவின் தலைவரால் இயந்திரத்துப்பாக்கி (G.P.M.G) எதிரிகளுக்கு எதிராக இயக்கப்படுகிறது. புலிகளின் கைகளிலிருந்த ஏனைய இரு கரி குழல் துப்பாக்கிகளும் (G.3) கூடவே இயங்குகின்றன. மற்ற இருவரும் ரவைக் கூடுகளில் ரவை நிரப்பிக் கொடுக்கிறார்கள்.
6. 'வாழ்க தமிழீழம்,' 'தர்மம் வெல்க' போன்ற வீராவேசக் குரல்களுடன் புலிகளின் ஆக்ரோசத் தாக்குதல் தொடர்கிறது ஒரு புலியிடமிருந்து கரிகுழல் துப்பாக்கி தானியங்கி நிலையில் இயக்கப்படுகிறது. இதனால் விரைவில் ரவைகள் தீர்ந்துவிடும், என்பதை அவதானித்த அக்குழுத் தலைவன் அவனைக் கடிந்து கொண்டு அத்துப்பாக்கியை வாங்கி தானே சுட ஆரம்பிக்கின்றான்.
7. விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்படுகின்றன. படகைச் சுற்றியுள்ள நீர்ப்பரப்பில் குண்டுகள் வீழ்ந்து வெடிக்கின்றன. குண்டு வெடிப்பில் கடல்நீர் பனையளவு உயரத்திற்கு எழுப்புகிறது. நீர்ப்பரப்பினில் கொழுந்து விட்டெரியும் தீச்சுவாலைகள். ஆடும் அலையினில் தள்ளாடும் படகு, கவிழ்ந்து விடுமோ என்ற அச்சமும் எழுகிறது.
8. தொடர்ச்சியான சூட்டின் காரணத்தால் இயந்திரத்துப்பாக்கி திடீரென இயங்க மறுக்கிறது. இயந்திரத் துப்பாக்கி இயங்காததை எதிரிகள் கண்டு கொண்டால், உற்சாகம் பெற்றுத் தாக்குதல்களை தீவிரப்படுத்துவார்கள் என்பதை உணர்ந்து கொண்ட விடுதலைப் புலி ஒருவர் அதன் குழலை மாற்றுவது போல பாவனை செய்த வண்ணம் அதனை சரிப்படுத்த முயல்கிறார். ஆனால்... முயற்சியில் வெற்றியில்லை.
9. என்ன கொடுமை... படகின் இயந்திரங்களில் ஒன்றும் படையினரின் தாக்குதலால் செயல் இழக்கிறது. படகின் வேகம் தடைப்படுகிறது. அங்கு மரணபயம் சூழ்கின்றது. இயந்திரத்தை திருத்துவதில் ஒருவர் ஈடுபடுகிறார். இதே வேளை கையில் இருக்கும் சயனைட் நச்சுக்குப்பிகளை கணக்கிடுகிறார் குழுத்தலைவர். இருப்பதோ ஆறுபேர் கையில் இருக்கும் விஷக் குப்பிகளோ மூன்று.
10. இதேவேளை செயற்பட்டுக் கொண்டிருந்த 2 கரிகுழல் துப்பாக்கிகளுள் ஒன்று செயற்படாது போகின்றது. நிலைமை மிகவும் மோசமாகிறது...
11. தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு வருகிறார்கள் அந்த இளம்புலிகள். எனினும் மூன்று சயனைட் குப்பிகள் மட்டுமே இருப்பதால் அவற்றை யார் பாவிப்பது என்ற சச்சரவும் அங்கு எழுகின்றது. அவர்கள் ஒருவரேனும் உயிருடன் எதிரியிடம் பிடிபடுவதை விரும்பவில்லை.
12. "மூன்று குப்பிகளையும் பாதி, பாதியாகப்பயன்படுத்துவோம்" என்று கூறிய அவர்களின் தலைவன் ஆறு துப்பாக்கி ரவைகளை தனியாக எடுத்து வைக்குமாறும், கட்டளையிடுகிறான். ஏதாவது விபரீதமாகிவிட்டால் தனது ஐந்து சகவீரர்களையும் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொள்வதே அந்தத் தலைவனின் இந்தக் கட்டளைக்கான நோக்கம். மரணத்தை அரவணைப்பதில்கூட அந்த வீரர்களின் நடவடிக்கையில் எவ்வளவு முன்னெச்சரிக்கை.
13. இயங்கமறுத்த கரிகுழல் துப்பாக்கி வீரனொருவனால் சரி செய்யப்படுகிறது. கரிகுழல் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ஒரு குண்டு ஹெலிகாப்டர்களுள் ஒன்றைத் தாக்குகிறது பேரிரைச்சலுடன், கரும்புகையைக் கக்கியவாறு, காற்றாடிகள் செயல்படாது, சிவப்பு நிற விளக்குகள் எரிய அந்த ஹெலிகப்டர் தடுமாறுகிறது.
14. சில நிமிடங்களில் தலைகுப்புற கரையோரக் கடலினுள் வீழ்கிறது. பொங்கியெழுந்த பேரலை அதை விழுங்குகிறது.
15. ஏனைய ஹெலிகொப்டர்களும், விமானமும் பின்வாங்குகின்றன. இறுதிவரை போராடிய புலிகள் தமக்குக் கிடைத்த வெற்றிக்காக, பெருமிதத்துடன் மகிழ்ச்சி ஆரவாரத்திலீடுபடுகின்றனர். பின்வாங்கும் விமானங்களைப் பார்த்துக் கையசைத்து கேலி செய்த வண்ணம் தளம் திரும்புகின்றனர்.




ரவிவேலுப்பிள்ளை
(சூரி) 18.6.86

# வீர வணக்கம்

சி. இராசகுமார்
(2வது லெப். ரங்கா) 27.4.86

க. சண்முகானந்தன்
(2வது லெப். ஆனந்தப்பா) 18.6.86



ச. ஸ்ரீசர்வானந்தா
(சேரன்) 18.6.86

கடல் பரப்பில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி காலம் காலமாகக் கூறுகின்றன அலைகள். கடலோடிய தமிழரின் பரம்பரையில் வந்த தமிழீழக் கடற்புலிகளின் கடல் அனுபவம், போர்கள், வீரச்செயல்கள், தியாகங்கள், மரணங்கள்... புதிய வரலாற்றினைப் படைக்கின்றன. அவர்கள் — காற்றின் வேகத்தையும், அலைகளின் கொந்தளிப்பையும், நீரின் சுழிப்பினையும் அறிந்து, சுக்கானைக் கையில் பிடித்து, வேகமாக, லாவகமாக படகைச் செலுத்தும் ஓட்டிகள்—மீனவர்கள் 'வலை படுத்தி'ருக்கிறார்களா, கரும்புள்ளியாகத் தூரத்தே தெரிந்து பூதகரமாகச் சீறிப்பாய்ந்து வரும் சிங்கள ரோந்துப் படகு தென்படுகிறதா என கண்களைக் கூர்மையாக்கி, தளத்தில கால்களை உறுதியாக ஊன்றி, அணியத்தின் முன் அசையாது நின்றவாறு விரிந்த பார்வையில் கடலை அளக்கும் காவலர்கள் — பொங்கும் கடலை அமைதி அடையச் செய்ய 'அம்மா'! என்று அன்பான பாவத்துடனும், ஒருவித பயத்துடனும் அழைத்து, படகினுள் துள்ளிவிழும் மீன்களுடன் அளவளாவி, வட்டமிடும்பறவைகளுடன் சேர்ந்து பாடி, காற்றுடன் குலாவி, வான்வெளியில் தோன்றும் வண்ணச் சேர்க்கைகளைக் கண்டு குதூகலித்து, தெறிக்கும் உப்பு நீருள் முழுகி, புயலென்றாலும் பயமின்றிக் கடல்மேல் செல்லும் இயற்கையின் நண்பர்கள் — மீன்களுக்கு இணையான நீச்சல்காரர்கள்.

கடல் நடுவே கண்ட களங்களில் அவர்கள் செய்த தீரச்செயல்களை கடலலைகளும், காற்றும் எப்போதும் மண்ணுக்கு உரைத்துக் கொண்டிருக்கின்றன. கடல் அன்னையின் வயிற்றுள் விடுதலைச் சூலுற்ற முத்துக்களாய் வீழ்ந்துவிட்ட கடலோடிகளுக்கு எமது வீர வணக்கங்கள்!


போராட்டக் கடலில் முத்துக் குளிப்பவர்கள் நாம். முத்தெடுக்கும் காலம் வெகுதூரத்திலில்லை.



சுந்தரகுமார்
(லெப். நவேந்திரன்) 14.4.85




அ. யேசுராஜா
(ஜீயாப்) 18.6.86





(கனேஷ்மாமா) 14.4.85



க. பாலசுப்பிரமணியம்
(2வது லெப். மணிமாறன்) 18.6.86



கு. இராஜவடிவேல்
(2வது லெப். துரைக்குட்டி) 27.4.86



அ.சி. கணேசதாஸ்
(சோபஸ் செந்தப்பா ) 18.6.86






பொ. சுப்பிரமணியம்
(2வது லெப். அலிப்) 27.4.86

சுதாகர்
(சுதா) 14.4.85

மு. நடராஜா
(நடேஸ் மாமா) 14.4.85

அ. நந்தகுமார்
(கமல்) 14.4.85

சோ. யோகலிங்கம்
(லெப். ரவியப்பா) 18.6.86



ஆனந்த் லம்பேட்
(தேவராஜா) 18.6.86



ஜ. சிவநாதன்
(தெய்வா) 27.4.86



கார்த்திகேசன்
(கார்த்திக்) 27.4.86

(விசாகன்) 18.6.86



சு. கஜேந்திர மூர்த்தி
(ஞானி) 27.4.86



விஜயதாஸ்
(காந்தன்) 27.4.86

# நெல்சன் மண்டேலா
# தென்னுப்ரிக்காவின் ஆன்மா

உலகம் எவ்வளவு அநீதியானது; கொடூரங்களைப் புரியக் கூடியது என்பதற்கு ஒரு உருக்கமான உதாரணமாகத் திகழ்கிறார் நெல்சன் மண்டேலா. தென்னுபிரிக்க நிறவாத அரசாங்கத்தினுல் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுள்ள 3 கோடி கறுப்பின மக்களின் தன்னிகரற்ற தலைவரான் 68 வயதுடைய மண்டேலா 24 வருடங்களாக சிறைக்குகையினுள் வாடுகின்றார். நான்கு சுவர்களுக்குள் தனிமை இருளில் விளக்காக ஒளிர்கிறது அவரது ஆன்மா. அந்த ஆன்மா நீதிக்கும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் எதிரான சக்திகளுக்கெதிராக சதா போராடிக் கொண்டிருக்கிறது. இம் மாபெரும் மனிதரை தென்னுப்பிரிக்க போல்ஸ் மூர் சிறையினுள் அடக்கிவிடமுடியுமா? அவரது புரட்சிகர ஆன்மா தனது மக்களின் விடுதலைக்காகவும் அங்குள்ள அரசியல் கைதிகளின்விடுதலைக்காகவும் நிறவாதக் கொள்கையினுல் அவமானத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் உட்பட்டிருக்கும் தனது மக்களின் விடுதலைக்காகவும் உறுதியான போராட்டத்தை நடத்தும்படி மனித சமுதாயத்தின் மனசாட்சியை உலுப்பி விட்டுக்கொண்டிருக்கிறது.

18 ஜுலை 1918ம் ஆண்டு மண்டேலா பிறந்தார். சிறுவயதில் வயல்வெளிகளில் வேலைசெய்யும்போது தனது நாட்டு மண்ணின் வளத்தை அறிந்து கொண்டார். ஊர் பெரியவர்கள் கூறிய அம்மண் படைத்த வீரர்களைப்பற்றிய பரம்பரைக் கதைகளைக்கேட்டு ஆபிரிக்க பாரம்பரியத்தின் உன்னதத்தை உணர்ந்து கொண்டார். பள்ளிக்கூடத்தில் வெள்ளைப் பாதிரிமார்கள் எழுதிய வரலாற்று நூல்கள் தனது மக்களை காட்டுமிராண்டிகளாகவும், ஆடு மாடுகளைத் திருடும் கொள்ளையர்களாகவும் வர்ணித்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். தங்கள் சொந்த நிலங்களை விட்டுவெளியேற மறுத்த கறுப்பு மக்களை வெள்ளையர்கள் படுகொலை புரிந்த சம்பவங்கள் தனது வீட்டுக்கண்மையிலே நடைபெற்றதை கேள்விப்பட்டு உடைந்துபோனது மண்டேலாவின் இளம் உள்ளம். இன ஒதுக்கல் முறையும், வெள்ளையர் ஆதிக்கமும் தென்னுபிரிக்காவில் இவ்வாறு படிப்படியாக திட்டமிட்டுத் திணிக்கப்பட்டது. அவற்றிற்கு எதிராகவும் சமூக நீதிக்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் போராடவேண்டுமென்ற இலட்சிய உறுதி மண்டேலாவின் மனதில் ஆழமாக வேரூன்றி வளர்ந்தது.

30 களின் நடுப்பகுதியில் இனவாத ரீதியான சமூகக் கொள்கைகள் ஆபிரிக்கக் கறுப்பின மக்களை ஆழமாகப் பாதித்தன. அரசியல், மண்டேலாவின் மனதை ஆட்கொள்ளத் தொடங்கியது. 1936-ம் ஆண்டு முற்றுமுழுதாக வெள்ளையரைக் கொண்ட பாராளுமன்றம் கொஞ்சப் பேருக்கும் இருந்த வாக்குரிமையையும் பறித்தது. மேலும் பல இன ஒதுக்கல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு இலட்சக்கணக்கான கறுப்பு மக்கள் 13% மான நிலத்தினுள் நெருக்கப்பட்டனர்.

## தீவிர தேசியவாதி

மண்டேலா மெட்ரிகுலேசன் பரீட்சையில் சித்தி எய்தியபின் சட்டப்படிப்பை மேற்கொள்ளத் தொடங்கினுர். மாணவர்களின் பிரதிநிதிகள் சபையில் அங்கத்தவராக இருந்த மண்டேலா, அச் சபையின் அதிகாரங்களைக் குறைத்தமைக்காக கல்லூரித் தலைமைப் பீடத்திற்கு எதிராக பகிஷ்கரிப்பில் கலந்துகொண்டார். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவரைக்கல்லூரியில் இருந்து இடைநிறுத்தம் செய்தனர். அனைவராலும் விரும்பப்பட்டவராயும், தீவிர தேசியவாதியாகவும் இருந்த மண்டேலா அப்போது 22 வயதுடையவராக இருந்தார். அவருக்குத் திருமணம் பேசப்பட்டபோது அதனை நிராகரித்துவிட்டு வீட்டை நீங்கி ஜொகான்ஸ்பேக் பயணமானுர். அப் பயணம் அவரது நாட்டில் வெள்ளையரின் குடியேற்றவாத வரலாற்றை அவருக்கு தெளிவாக படம்பிடித்துக்காட்டுவதாக அமைந்தது. நகரை அவர் அடைந்த போது அங்கு இன ஒடுக்குமுறையின் அவலங்களை அவர் நிதர்சனமாகக்கண்டார். நிலமற்ற, தங்கள் நிலங்களில் இருந்து துரத்தப்பட்ட, வேலையற்ற ஆபிரிக்கர்கள் சன நெருக்கம் நிறைந்த சுகாதாரக்கேடான, நீர், மின்சாரம், தார் வீதிகள் போன்ற வசதிகளற்ற ஒதுக்குப்புறமான இடங்களில் அடைக்கப்பட்டிருந்தனர். செல்வம் படைத்த சிறுபான்மை வெள்ளையர்களோ விசாலமான முற்றங்களையுடைய அழகிய வீடுகளில் ஆடம்பரமாக வாழ்ந்தனர். வெள்ளையர்கள் மேலும் மேலும் செல்வர்களான போது கறுப்பு மக்கள் மேலும் மேலும் ஏழைகளாகினர். சுரண்டலும், புறக்கணிப்பும், அவமதிப்பும் கறுப்பின மக்களின் வாழ்க்கையை நரகமாக்கின. கூலிக்காரராக தங்க, கனிச்சுரங்கங்களில், வேலைக்காரர்களாக வெள்ளையர்வீடுகளில், சுத்தம் செய்பவர்களாக வெள்ளையர் குடியிருப்புகளில் குறைந்த கூலிக்கு வேலை வாங்கப்பட்டனர். அனுமதிச்சீட்டு இன்றி ஒரு வேலையைச் செய்யவோ, ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியிருக்கவோ முடியாதிருந்தது.

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

ஜொகானஸ்பேக்கில் வெள்ளையரால் திணிக்கப்பட்டசீர்கெட்ட சமூக அமைப்பிற்கு எதிராக போராடிக்கொண்டிருந்த வோல்டர் சிசிலு, ஒலிவர் தம்போ ஆகிய சிறந்த அரசியல் தலைவர்களை மண்டேலா சந்தித்தார். அப்போதே ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் அங்கத்தவராக இருந்த வோல்டர் சிசிலு, சட்டப்படிப்பை மண்டேலா தொடங்குவதற்கு பண உதவி செய்தார். ஆபிரிக்கத் தேசியக் காங்கிரசின் தற்போதைய தலைவரான ஒலிவர் தம்போ அப்போது கணக்கியல் ஆசிரியராக இருந்தார். போராட்டத்திற்கு உத்வேகத்தையும், புது வடிவத்தையும் கொடுத்து போராட்டத்தை முன்னெடுத்துச்சென்ருேர் இம் மூவருமேயாவார்.

அப்போது ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பல அங்கத்தவர்களை இழந்து பலவீனமுற்று இருந்தது. வேகம்கொண்ட புதுத்தலைமுறைப் போராளிகளைப் பொறுத்தவரை A.N.C. உரிமைகளைக்கோரும் கனவான்களின் அமைப்பாக, மக்களை அணிதிரட்டவோ, எழுச்சிகரமான போராட்டத்தை நடத்தவோ தகுதியற்ற பலவீனமான கட்டமைப்பாக இருந்தது. அமைப்பை விட்டு நீங்குவதைவிட புதிய தமது கருத்துக்களைப் புகுத்தவும், அமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவரவும் உள்ளிருந்து கொண்டு போராடுவதே சிறந்த தந்திர உபாயமெனக் கருதினர். மக்களது உண்மையான அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தப்படவேண்டுமென்று வாதாடினர். தேசிய



ரீதியில் அமைந்த இளைஞர் சங்கம் (Youth League) ஒன்றை அமைக்க முற்பட்டனர். ஒலிவர் தம்போ இளைஞர் சங்க செயலாளரானுர்.புதிய கொள்கைத் திட்டங்களை வகுப்பதில் மண்டேலா பங்குபற்றினர். அவர்களது நோக்கம் A.N.C யை சக்திவாய்ந்த தேசிய விடுதலை இயக்கமாக மாற்றுவதுதான். அக்கால அரசியல் வாழ்வில் நெல்சன் மண்டேலா தீவிரமான ஆபிரிக்க தேசியவாதியாக இருந்தார். இந்திய சுதந்திரப்போராட்டத் தலைவர்களை நெல்சன் மண்டேலா அப்போது சந்தித்தார். ஆயினும் அவர்களது திறமையிலும் போராட்ட முறையிலும் மதிப்பு வைத்திருந்தாராயினும், A.N.C தானே தனியாக தனது போராட்டத்தை நடத்தவேண்டுமென்று உறுதியாக நம்பினுர். 1948ம் ஆண்டு நாஸி சார்புக்கட்சியான ஆபிரிக்கானர் தேசியக்கட்சி (Afrikaner National Party) ஆட்சிக்கு வந்தது. அக்கட்சி நிறவாதத்தை சட்டரீதியாக்கியது. அரச அடக்குமுறை தீவிரமடைந்தது. வெள்ளை நிறமில்லாத மற்ற நிற மக்கள் அனைவரும் இதனுல் பாதிக்கப்பட்டனர். இந்த இனவாத முறையை இல்லாதொழிக்க மக்கள் திடம்கொண்டனர்.

## மக்கள் கிளர்ச்சி

ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பல்வேறு அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் எழுச்சிகள் நாடெங்கும் இடம்பெற்றன. மக்கள் போராட்டத்திற்கான காலம் வந்துவிட்டதை உணர்ந்த இளைஞர் சங்கம் செயல் திட்டமொன்றை (Working Programme) வகுத்தது. அத்திட்டத்தை நடைமுறைப் படுத்த A.N.C தலைமை தயக்கம் காட்டியது. தலைமையினுள் நெருக்கடி ஏற்பட்டு புதிய தலைமை பதவி ஏற்றது. புதிய தலைமை, காங்கிரஸினுள் தீவிரவாதக் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாய் இருந்தது. காங்கிரஸின் தேசிய நிர்வாக சபையில் மண்டேலா ஒரு அங்கத்தவரானுர். காங்கிரஸின் பல்வேறு கருத்துக்களைப் பிரதிபலிக்கும் சகல பிரிவினரும் செயல் திட்டத்தை அங்கீகரித்தனர். அதனைத் தொடர்ந்தது மக்கள் எழுச்சிகளின் காலம். ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், வேலைநிறுத்தங்கள் ஆகியவை மூலம் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். காங்கிரஸ் தலைவர்களும், அமைப்பாளர்களும் ஒருங்கிணைந்த போராட்டத்தின் வல்லமையை உணர்ந்துகொண்டனர். செயல் திட்டத்தின் அடுத்தகட்டமான சட்டமறுப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அடக்கப்பட்ட மக்களின் சகல பிரிவினரையும் ஒன்றிணைத்த போராட்டத்தினுல் வெளிப்பட்ட சக்தி மண்டேலாவைப் பிரமிக்க வைத்தது. அன்றிலிருந்து, பொது எதிரியை எதிர்கொள்ள மக்களின் சகல பிரிவினரையும் ஒன்றுபட்ட செயல்பாட்டுக்காக் அணிதிரட்டவேண்டும் என்ற கொள்கையிலிருந்து மண்டேலா விலகவேயில்லை.

1950ம் ஆண்டு இளைஞர் சங்கத்தின் தலைவராகவும், சட்டமறுப்புப் போராட்ட தொண்டர்படைத் தலைவராகவுமானுர். நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வன்முறையற்ற சட்டமறுப்புப் போராட்டம் பற்றிய கோட்பாடுகளை விளங்கப்படுத்தியதுடன் தொண்டர்களைப் போராட்டத்தில் சேரும்படியும் அறை கூவி அழைத்தார். நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சகல பிரிவு மக்களையும் நோக்கி அவரது குரல் ஓங்கி ஒலித்தது. அனைவரையும் ஆட்கொள்ளும் அபூர்வசக்தி அவரிடம் இருந்தது. அவரது பேச்சின் கவர்ச்சியில் ஈர்க்கப்பட்டு, அவரது கூட்டங்களில் மக்கள் வெள்ளம் அலைமோதியது. மண்டேலா மக்களின் தலைவரானுர்.

மக்கள் எழுச்சிகளும், A.N.C.க்கு மக்கள் ஆதரவும் பெருகிக்கொண்டிருந்த இக்காலகட்டத்தில் கம்யூனிச ஒழிப்புச்சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் 'கம்யூனிசவாதி' என்று கருதப்படுபவன், குழப்பத்தையோ, ஒழுங்கினத்தையோ ஏற்படுத்தி, சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களைச் செய்ய முயல்பவனுகும். A.N.C. அடிப்படையான மாற்றத்தை வலியுறுத்தி, மக்களை அணிதிரட்டியபடியால் அதனை அடக்கும் நோக்குடன்தான் அச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்தின் கீழ் மண்டேலா உட்பட நூற்றுக்கணக்கானேர் மீது தடைவிதிக்கப்பட்டது. ஜொகானஸ்பேக்கை விட்டு வெளியேறக் கூடாது என்றும், கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்றும் தடுக்கப்பட்டார். வெளியரங்கமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது போயினும், இரகசியமாக அவரது பணி தொடர்ந்தது. 1953 இல் A.N.C. மகாநாட்டின்போது அவரால் வாசிக்கப்பட வேண்டிய தலைவர் உரை வேருெருவரால் வாசிக்கப்பட்டது. நிறவாதம் மக்களுக்கு விளைவிக்கும் கொடுமைகளை விமர்சித்துக் கட்டுரைகள் எழுதினுர்.

A.N.C.தலைமைப்பீடத்தைச் சேர்ந்த அனேகமாக எல்லோர் மீதும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## சுதந்திர சாசனம்

1955ம் ஆண்டு மக்கள் காங்கிரஸ் (Congress of the People) கூட்டப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக் காங்கிரஸில் A.N.C. யில் இன்றும் உள்ள கொள்கைகளுக்கு அடிப்படையான சுதந்திர சாசனம் (Freedom Charter) மக்களிடம் கையளிக்கப்பட்டது. சுருக்கமாகக்கூறினுல் தென்னுபிரிக்கா அங்கு வாழுகின்ற அனைவருக்கும் உரித்தது என்றும், மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே ஒரு அரசாங்கம் அங்கு அமையமுடியுமென்றும், எல்லோருக்கும் சம உரிமைகள் இருக்கும் என்றும், நிலமற்றவருக்கு நிலம், எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வீடு, எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு வசதி, அமைதி, நட்பு ஆகியவை கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் சுதந்திர சாசனத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. 1955-டிசம்பர் வரை மண்டேலா சட்டவிரோதமாக, இரகசியமாக செயல்பட்டு வந்தார். தேசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில் அவர் கைது செய்யப்பட்டார். சிசிலு, தம்போ உட்பட A.N.C. தலைமைப்பீடம் முழுவதும் கைதானது.

பிணையில் விடுவிக்கப்பட்ட மண்டேலா தொடர்ந்து அரசியல் சட்ட வேலைகளில் ஈடுபட்டார். 1958 இல் வின்னி நொம்சாஞவை மணந்து கொண்டார். நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும் போது வின்னி மண்டேலா நிறவாதக் கொள்கைக்கு எதிரான இடைவிடாத போராட்டத்தில் துயரங்களைச் சுமந்து கொண்டு ஈடுபட்டு வருகிருர்.

தேசத்துரோக குற்ற வழக்கு 1958 ஆகஸ்டில் ஆரம்பமாகியது. நெல்சன் தானே தனக்காக வாதாடினுர். நிறவாதத்திற்கு எதிரான தனது மக்களின் போராட்டத்தை உலகின் கவனத்திற்கு கொண்டுவரும் பிரச்சார மேடையாக வழக்கைப் பயன்படுத்தினுர். அவரது மேம்பட்ட தகுதியும், திறமையும், வழக்கின் மூலம் வெளிப்பட்டது. வழக்கு தள்ளப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை A.N.C. முற்ருகத் தடை செய்யப்பட்டு சாப்பவில் படுகொலை நடந்து முடிந்திருந்தது. மண்டேலா தனது மக்களுக்காக தலைமறைவாக இருந்து செயல்படத் தீர்மானித்தார். அவரைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. "கறுப்பு பிம்பனெல்" என்று மண்டேலா பிரபல்யமடைந்தார்.

## வன்முறைப் போராட்டம்

அமைதிவழிப்போரட்டங்கள் நிறவாத அமைப்பில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரப்போவதில்லையென்பது மண்டேலாவிற்குத் தெளிவாகப் புரிந்தது. அரச வன்முறைக்கு முன்னுல் அரசியல் கிளர்ச்சிகள் பயனற்ற வழிமுறைகள் எனக் கண்டுகொண்டார். நிலைமையைக் கவனமாக ஆராய்ந்தபின் வன்முறையை வன்முறையால்தான் முறியடிக்கலாம் எனத் தீர்மானித்தார். A.N.C. ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்க முடிவுசெய்தது. A.N.C. இன் இராணுவப்பிரிவான "தேசத்தின் ஈட்டி" (Spear of the Nation) ஐ அமைக்கும் பொறுப்பு மண்டேலாவிடம் விடப்பட்டது. இராணுவ நடவடிக்கைகளில் நாசவேலைதான் சிறந்த வழிமுறையென தீர்மானிக்கப்பட்டது. இதன்மூலம் பொதுமக்கள் பெரியளவில் கொல்லப்படுவதை தவிர்க்கலாம் எனக் கருதினர்.

17 மாதங்களாக அரச பயங்கரவாதிகளின் கைகளில் சிக்காமல் தலைமறைவாகஇருந்துகொண்டே இராணுவப்பிரிவை கட்டிவளர்ப்பதில் ஈடுபட்டார். இவ்வுண்மை மக்களை எழுச்சிபெறச் செய்தது. பல்வேறு மாறு வேடங்களில் இடத்திற்கு இடம் பெரும்பாலும் தனித்தே நடமாடினுர். ஆபிரிக்கக் கறுப்புப்புலி இறுதியில் வஞ்சகர் வலையில் வீழ்ந்தது. துரோகி ஒருவன் கொடுத்த செய்தியின் பேரில் அவர் சென்ற கார் பொலிசாரால் மறிக்கப்பட்டது. மண்டேலா கைது செய்யப்பட்டார். 1962 ஆகஸ்ட் மாதம் ஆயுட்கால சிறைவாசம் ஆரம்பமாகியது. புலி அடைக்கப்பட்ட குகைக்கு பூட்டிய கதவுகள் இருந்தன, காவலர்கள் இருந்தனர். வெளியேற முடியவில்லை. இப் பேரிடி மாண்டேலாவின் மீது மட்டுமல்ல; தென்னுபிரிக்க அடக்கப்பட்ட மக்கள் மீது மட்டுமல்ல; உலகின் அடக்கப்பட்ட மக்கள் மீதும் விழுந்தது.

## சிறைத் தண்டனை

ஆப்பிரிக்கத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டியதாகவும், செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இன்றி வெளிநாடுகளுக்குச் சென்றதாகவும் மண்டேலா மீது குற்றம் சுமத்தப்பட்டது. இம்முறையும் தானே தனக்காக வாதாடினுர். மக்களுடைய வேதனைகளையும, அபிலாசைகளையும், போராட்டங்களையும் திறம்பட எடுத்துக்கூறும் மேடையாக நீதிமன்றத்தை பயன்படுத்தினுர். 'தேசத்தின் ஈட்டி' இராணுவ அமைப்பில் மண்டேலாவின் செயல்பாடு பற்றி நிரூபிக்க எவ்வித ஆதாரமும் அரசாங்கத்திற்கு இல்லாதுபோயினும். அவருக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுதப்போராட்டம் தொடர்ந்தது. நாசவேலைகள் இடம்பெற்றன. போராளிகள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அரசபடைகளால் வோல்டர் சிசிலு கைதுசெய்யப்பட்டார். சிசிலு மற்றும் வேறு போராளிகளுடன் சேர்ந்து மண்டேலா மீது மீண்டும் வழக்கு விசாரணை நடைபெற்றது. நீதிமன்றம், போராளிகளுக்கு இலட்சியக்கருத்துக்களை உள்ளடக்கிய அரசியல் அறிக்கைகளை

வெளியிடும் களமாயிற்று. வழக்கு முடி வுறும் தருவாயில் அரசதரப்பில் சாட்சி ஒருவன் ஆஜர்செய்யப்பட்டான். அவன் மண்டேலாவையும் A.N.C. போராளிகளை யும் காட்டிக்கொடுத்தான். தங்கள் இயக் கத்தையும் போராட்ட நடவடிக்கைகளை யும் நியாயப்படுத்தி வாதாட வேண்டிய நிலை இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ள போராளிகளுக்கு ஏற்பட்டது. அவர்களது உயிர்கள் பறிக்கப்படும் நிலை உருவாகி யது. 'தேசத்தின் ஈட்டி' அமைப்பில் தான் வகித்த பங்கை மண்டேலா ஒத்துக் கொண்டார். நீதி மன்றத்தில் நான்கு மணி நேரம் உரை நிகழ்த்தினார். முடிவில் அவர் கூறினார் :

"ஆபிரிக்க மக்களின் போராட்டத் தோடு எனது வாழ்வை அர்ப்பணித் துவிட்டேன். வெள்ளையர் ஆதிக்கத் தையும், கறுப்பர் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடினேன். நான் உருவாக்க எண்ணியது சுதந்திர, ஜன நாயக சமுதாயமே. அங்குதான் எல் லோரும் ஒத்திசைவுடனும், சம சந் தர்ப்பங்களுடனும் ஒன்றாக வாழமுடி யும். அந்த இலட்சியத்திற்காகவே நான் வாழவும், அதனைச் சாதிக்கவும் விரும்புகிறேன். தேவை ஏற்படின் அந்த இலட்சியத்திற்காக இறக்கவும் தயார்".

மண்டேலா, சிசிலு இன்னும் ஐவரை மகா தேசத்துரோக குற்றவாளிகளாக நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. ஆயுள் சிறைத்தண்டனை குறித்த தீர்ப்பு வாசிக்கப் பட்டபோது அவர்கள் கலங்கவில்லை; உணர்ச்சிவசப்படவில்லை. சனத்திரள் நிரம் பியிருந்த பொதுமக்கள் பகுதியை நோக்கி திரும்பி மென்முறுவல் பூத்தனர்.

மண்டேலா பெருவிரலை நிமிர்த்தி வெற்றி வணக்கம் செய்தார். பின்னர், ஆயுள் தண்டனையை அனுபவிக்க மெல்ல சிறைக்கூடம் நோக்கி நடந்தார்.

நெல்சன் மண்டேலா சிறைக்கு உள் ளும், வெளியிலும் எந்த இலட்சியங் களுக்காக இடைவிடாது போராடினாரோ அவை தேசங்களின் எல்லைகளை கடந்து எங்கும் வியாபிக்கின்றன. ஆத்தகைய மனிதரை அவரது வாழ்க்கை பூராவும் குரூரமான அநீதிக்கு உட்படுத்திய இந்த 'நாகரீக' உலகம் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அவரது சிறை வாழ்க்கை நீதி, சமத்துவம் சமாதானம், மக்களிடையே நட்புறவு ஆகிய விழுமிய இலட்சியங்களை மதித்து அவற்றுக்காக போராடுபவர்களுக்கு ஒரு உன்னத உதா ரணமாக விளங்குகிறது. இத்தகைய இலட் சியங்கள் வெற்றிபெறக்கூடாதென்ற நோக்குடன் இன்றைய உலகில் செயல்படு கின்ற நாசகார சக்திகளையும் நாம் கவனத்தில் எடுக்க அவரது தியாகம் உதவுகிறது. நாம் போராடவேண்டும், தொடர்ந்து போராடவேண்டும். தியாகங் களுடன் கூடிய போராட்டம்தான் எமது குறிக்கோளை வெற்றியடையச் செய்யும். நெல்சன் மண்டேலாவும், சக போராளி களும் சிறைக்குள் இருந்து விடும் ஏக்கப் பெருமூச்சுகள் வெளியில் நெருப்பாகப் பற்றி நிறவாத அரசை விரைவில் சுட்டுப் பொசுக்கப்போவது உறுதி.

விடுதலைப்புலிகள் பத்திரிகைக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோரும் சந்தா கட்ட விரும்பு வோரும் A. ராஜாராம் என்ற பெயருக்கு மணி யார்டர் மூலமாகவோ, காசோலை மூலமாகவோ அனுப்பலாம். ஆண்டு சந்தா ரூ 25. Post Box 928, அடையார், சென்னை 20.

பிழைதிருத்தம்

விடுதலைப்புலிகள் குரல் 10ல் 'முப்படைத் தாக்குதலை முறியடித்தோம்' என்னும் கட்டுரையில் - 'இந்த இராணுவ அணியை எமது வீரர்கள் கொடிகாமத் திற்கு அண்மையில் வைத்து சுற்றி வளைத்து கடும் போரில் இறங்கினர்' என்ற வரி 'இந்த இராணுவ அணியை எமது வீரர்கள் ஆனைவிறவு முகாமுக்கு சில கி.மீ தொலைவில் உள்ள இயக்கச் சிக்கு அண்மையில் உள்ள புதுக்காட்டுச் சந்தியில் வைத்து சுற்றி வளைத்து கடும் போரில் இறங்கினர் என்று இருந்திருக்க வேண்டும். தவறுக்கு வருந்துகிறோம்.

**ம**ட்டக்களப்பில் கடந்த 18.9.1986 அன்று முற்பகல் 11.15 மணியளவில் கார்க்குண்டு ஒன்று வெடித்தது. அரசின் விசேட அதிரடிப்படையினர் அவ்வழியா கச் சென்ற சமயத்திலேயே இக்கார்க் குண்டு வெடித்தது. இதனால் அரசபடை யினரது ஜீப்வண்டி சேதமாகியது. ஆயி னும் அவர்களில் 6 பேர் காயங்களுடன் தப்பினர். இந்த கார்க் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் வெறித்தனமான தாக்குதலில் ஈடுபட்டார் கள். தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களது வீடுகளும், கடைகளும் சூறையாடப்பட்ட பின்னர் தீவைத்து எரிக்கப்பட்டன. தமிழ் மக்களைக் கைது செய்து வரிசையாக நிற்க வைத்து சுட்டுக் கொன்றனர். இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் களில் 12 பேர்களது உடல்கள் மட்டக் களப்பு வைத்தியசாலைக்கு கொண்டுவரப் பட்டன. இவைகளில் இரண்டு உடல் களைத் தவிர ஏனைய 10 உடல்களிலும் குண்டுக் காயங்கள் காணப்பட்டன. மேலும் 2 உடல்கள் கருகிய நிலையில் காணப்பட்டன. கொல்லப் பட்டவர் களில், பெரும்பாலானோர் 15 வயது முதல் 20 வயதுக்குட்பட்டவர்கள். இறந்தவர் களில் $1\frac{1}{2}$ வயது குழந்தை மற்றும் 65 வயதான செயின்ட் அந்தோனி தேவா லயத்தின் பாதிரியாரும் அடங்குவர். இதைவிட மட்டக்களப்பு விமான நிலை யத்திற்கு அருகேயுள்ள மயானத்தில் 35 தமிழ் மக்களது உடல்கள் அரசபடை யினரால் எரிக்கப்பட்டன. இவர்களது இந்த வெறியாட்டத்திற்கு எல்லாமாக 47 அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகி னார்கள். 18 பேர் காணாமல் போயுள்ளனர். சந்தேகத்தின் பெயரில் பள்ளிச் சிறுவர்கள் உட்பட 150க்கும் அதிகமான தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கல்லடி இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்

மட்டக்களப்பிலுள்ள தமிழ் கிராமங் களில் சிங்களப்படையினர் மேற்கொண்ட வெறியாட்டத்தினால் அச்சமடைந்த 10,000க்கும் அதிகமான மக்கள் அகதி களாக காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். பாதுகாப்புப் படையினர் அப்பாவித் தமிழ்மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றதைக் கண்டித்தும், துண்டிக்கப் பட்ட நிலையில்காணப்படும் 15 தமிழ் கிராமங்களுக்கு அத்தியாவசியமான உண வுப் பொருட்கள் வழங்கப்பட்டதைக் கண்டித்தும், மக்கள் பொது பகிஷ்கரிப் பொன்றை நடத்தினார்கள், மட்டக்களப்பு நகரில் உள்ள கடைகள், வியாபார நிறுவனங்கள், யாவும் மூடப்பட்டு நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. இவ்வா றான சம்பவங்களையடுத்து அரசாங்கம் 16 மணி நேர ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. இத்துடன் அந்தப் பகுதியில் 2 புதிய முகாம்கள் அரசபடை யினரால் அமைக்கப்பட்டுள்ளன. இம்மு காம்களில் பாகிஸ்தானில் பயிற்சியளிக் கப்பட்ட 300க்கும் அதிகமான அதிரடிப் படைப் பொலிசார் குவிக்கப்பட்டுள் ளனர்.

**மா**ங்குளம் இராணுவ முகாமில் கரடி ஒன்று வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த முகாமில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைத்துள்ள இளைஞர்கள் மீது இந்தக் கரடியைப் பாயவிட்டு சித்திரவதை மேற்கொள்வதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஈழநாடு 11.09.86

**ந**ல்லூர் கந்தசாமி கோவில் (யாழ்ப் பாணம்) வருடாந்த உற்சவம் இன்று நடைபெறும் பூங்காவனத் திருவிழாவுடன் இனிது முடிவடைகிறது.

குழந்தைப்பிள்ளைகள் பலரும் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த விளை யாட்டுத் துப்பாக்கிகளையே வாங்குவதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. சின்ன, பெரிய ரகத் துப்பாக்கிகளை சிறுவர், சிறுமியர் வாங்கிச் சென்றனர்.

வீரகேசரி 4.9.86.

## தமிழீழத்தில் ஸ்ரீலங்கா முப்படைகளின் ஆக்கிரமிப்பு முகாம்கள்




யாழ் மாவட்டம்

1. யாழ் கோட்டை (இ)
2. நயினாதீவு (க)
3. காரைநகர் (க)
4. பலாலி (இ. வி)
5. காங்கேசன்துறை (இ)
6. தொண்டமனாறு (இ)
7. வல்வெட்டித்துறை (இ)
8. பருத்தித்துறை (இ)
9. நாவற்குழி (இ)

கிளிநொச்சி மாவட்டம்

10. ஆனையிறவு (இ)
11. பூநகரி கோட்டை (இ)
12. நாவலக்கட்டை (இ)
13. கிளிநொச்சி (இ,பொ)
14. கொக்காவில் (இ)

முல்லைத்தீவு மாவட்டம்

15. முல்லைத்தீவு (இ)
16. ஒட்டிசுட்டான் (இ)
17. கொக்கிளாய் (இ)
18. மாங்குளம் (இ)
19. டொலர்பாம் (இ)
20. கென்பாம் (இ)
21. சிலோன் தியேட்டர் (இ)
22. சிறிபுரம் (இ)

வவுனியா மாவட்டம்

23. செட்டிகுளம் (இ)
24. உலுக்குளம் (இ)
25. [illegible] (இ)
26. மடுகந்த (இ)
27. வவுனியா (வி,இ,பொ.அ.)
28. மாமடுவ (இ)
29. ஓமந்தை (இ)
30. தம்பனைக் குளம் (இ)

மன்னார் மாவட்டம்

31. தலைமன்னார் (க,இ,பொ)
32. மன்னார் (இ,பொ.அ)
33. தள்ளாடி (இ)
34. முருங்கன் (இ,பொ.அ)
35. சிலாவத்துறை (இ)
36. கொண்டச்சிபாம் (இ)
37. பறையனாலன் குளம் (இ)

திருகோணமலை மாவட்டம்

38. தென்னைமரவாடி (இ)
39. புல்மோட்டை (இ,பொ.அ)
40. திரியாய் (இ)
41. குச்சவெளி (இ,க,பொ)
42. நிலாவெளி (இ)
43. சிறிமாபுரம் (இ)
44. செல்வநாயகபுரம் (இ
45. உப்புவெளி (இ)
46. கன்னியா (இ)
47. பன்குளம் (வி,இ,பொ.அ)
48. வெல்கம் விகாரை (இ)
49. தம்பலகாமம் (இ)
50. வானூறு (இ,பொ)
51. கந்தளாய் (இ)
52. சோமபுர (இ)
53. தெகிவத்த (இ)
54. கதிரவெளி (இ)
55. அலுத்ஓயா (இ)
56. சேருவில (இ)
57. கோமரன் கடவெல (இ)
58. பாலம் போட்டாறு (இ)
59. மங்கி பிரிட்ஜ் (இ)
60. ஆரும் கட்டை (இ)
61. அபயபுரம் (இ)
62. உப்புவெளிச்சந்தி (இ,பொ.அ)
63. திருகோணமலைக்கோட்டை (க.அ)
64. பிரான்றிக் பொயின்ட் (இ)
65. திருகோணமலைத் துறைமுகம் (க.தளம்)
66. ஆண்டான் குளம் (க)
67. மீகுந்தபுரம் (இ)
68. லவ்லேன் (பொ.அ)
69. பிறிமா ஆலை (இ)
70. சீனக்குடா (வி)
71. கிண்ணியா (இ)
72. மூதூர் (இ,பொ)
73. கட்டைபறிச்சான் (இ)
74. கடவான (க)

மட்டக்களப்பு மாவட்டம்

75. வாகரை (இ)
76. மாங்கேணி (இ)
77. கல்குடா (பொ)
78. கும்புறுமூலை (இ,வி,பொ.அ)
79. வாழைச்சேனை (பொ)
80. வலையிறவு (வி)
81. சந்திவெளி (வி,பொ.அ)
82. ஏறாவூர் (வி,பொ.அ.)
83. மட்டக்களப்பு (பொ)
84. கல்லடி (வி.பொ.அ.)
85. களவாஞ்சிக்குடி (வி.பொ.அ.)
86. வெள்ளாவெளி (வி.பொ.அ)
87. புல்லுமலை (இ.ப.நி)
88. கரடியனாறு (வி.பொ.அ)
89. வாகனேரி (இ)
90. புனானை (இ.ப.நி)
91. வெலிகந்த (இ)
92. பெரியவட முனை (இ)

அம்பாறை மாவட்டம்

93. சவளக்கடை (இ)
94. கல்முனை (பொ)
95. சம்மாந்துறை (வி.பொ.அ)
96. அக்கரைப்பற்று (வி.பொ.அ)
97. திருக்கோவில் (வி.பொ.அ)
98. கோமாரி (இ)
99. பொத்துவில் (வி.பொ.அ)
100. கொண்டைவெட்டுவான் (இ.ப.நி)
101. அம்பாறை (இ)
102. உகனை (இ)
103. சென்றல் காம்ப் (பொ)
104 உல்லை (வி.பொ.அ)
105. எட்டாம்கட்டை (இ)
106. தமண (இ)

புத்தளம் மாவட்டம்

107. கல்பிட்டியா (க,பொ)
108. சிலாபம் (இ)
109. முந்தல் (பொ)
110. புத்தளம் (இ,பொ)
111. இலவன்குளம் (இ)

இ. இராணுவம்
க. கடற்படை
வி. விமானப்படை
பொ. பொலிஸ்
பொ.அ. பொலிஸ் அதிரடிப்படை
வி.பொ.அ. விசேட பொலிஸ் அதிரடிப்படை
இ.ப.நி. இராணுவ பயிற்சி நிலையம்

# Newsweek

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை அண்மையில் அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பிரபல சஞ்சிகையான " நியூஸ் வீக் "பேட்டி கண்டது. இப்பேட்டியின் போது பிரபாகரன் "நியூஸ் வீக்"கிற்கு கூறிய கருத்துக்களில் சில.......

நியூஸ் வீக் :- உங்களது கட்டுப்பாட்டின் கீழ் எவ்வளவு போர்வீரர்கள் இருக்கின்றார்கள்? அவர்கள் எங்கே பயிற்சி பெறுகின்றார்கள்?

பிரபாகரன் :- அது ஒரு இரகசியமான விடயமாகும். ஆனால் என்னால் ஒன்றை மட்டும் உங்களுக்குச் சொல்லமுடியும். சிறிலங்காவின் பலம் வாய்ந்த 51000 இராணுவத்தினரை உறுதியாக எதிர்கொள்ளக்கூடிய அளவுக்கு நாங்கள் போதுமான பலம் பெற்றிருக்கிறோம். அத்துடன் நீண்டகால கெரில்லா யுத்தத்தை தொடர்ந்து நடத்தவும் நாம் ஆயுதபலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றோம்.

நியூஸ் வீக் :- தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கம் மற்றைய எல்லாக் கெரில்லா இயக்கங்களைக் காட்டிலும் முதன்மையாகத் திகழ்வதற்கு காரணமென்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பிரபாகரன் :- கட்டுப்பாடும், ஒழுங்குமே முக்கியமாகும். எமது போராளிகளுக்கு நல்லொழுக்கத்தையும், நாட்டுப்பற்றையும் முக்கியமாக வலியுறுத்துகின்றோம். எதிரியினது கைகளில் உயிருடன் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்கு எங்களது இயக்க உறுப்பினர்கள் சயனைட் குப்பிகளை எப்போதும் தம்முடனேயே வைத்திருக்கின்றார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் பேராதரவு எங்களுக்கு இருக்கின்றது.

நியூஸ் வீக் :- ஜனாதிபதி ஜெயவர்தன தமிழ் மக்களது பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் எவ்வளவு தூரத்திற்கு அக்கறையாக இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பிரபாகரன் :- சமாதான முயற்சி என்று தற்பொழுது ஜெயவர்தனாவால் மேற்கொள்ளப்பட்டு வருவது உலகை ஏமாற்றுவதற்காக செய்யப்படும் கண்துடைப்பு நடவடிக்கையேயாகும். பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே சிறிலங்கா இராணுவத்தினர் கிட்டத்தட்ட 150 அப்பாவித் தமிழ் மக்களை கொலை செய்துள்ளார்கள். இவ்வாறான நடவடிக்கைகளில் இருந்து, தற்பொழுது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் யாவும் வெறும் பித்தலாட்டம் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். ஜெயவர்த்தனாவுடனான பேச்சுவார்த்தைகள் சாத்தியப்படும்; ஆனால் எப்பொழுது என்றால் எமது நாட்டின் எல்லைகளைப் பற்றி, அதாவது இரண்டு தனித்தனி நாடுகளினதும் எல்லைகளைப் பற்றி வரையறுக்கும் போது மட்டுமே.

நியூஸ் வீக் :- நீங்கள் இங்கே இருந்து கொண்டு செயற்பட இந்தியா ஏன் அனுமதிக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

பிரபாகரன் :- மனிதாபிமான அடிப்படையிலேயே இந்தியா இவ்வாறு செய்கிறது. சிறிலங்காவில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது. நாங்கள் இனப்படுகொலைக்கு எதிராகப் போராடி, எமது மக்களை இனப்படுகொலைகளில் இருந்து பாதுகாப்பதற்கு முயல்கிறோம் என்பதை இந்தியா நன்றாக அறிந்திருக்கிறது.

நியூஸ் வீக் :- சீக்கிய பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியளித்து வருகின்றது என்று இந்தியா பாகிஸ்தானை குற்றம் சாட்டி வருகின்றது. அதேவேளை உங்களுக்கு இங்கே புகலிடம் அளித்துள்ளதன் மூலம் "பயங்கரவாதிகளுக்கு" இந்தியா உறுதுணையாக இருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பிரபாகரன் :- இந்த இரண்டு பிரச்சனைகளுக்குமிடையே அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது. எங்களது மக்கள் சிறிலங்காவில் இனப்படுகொலைக்கு உள்ளாகிறார்கள். ஆனால் இந்திய இராணுவமானது பஞ்சாபில் இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

நியூஸ் வீக் :- இனப்பிரச்சனைக்கு சமாதானமாக பேச்சு வார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே இந்தியா ஆர்வமாக இருக்கிறது. அத்துடன் உங்களது தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கைக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?


பிரபாகரன் :- உலகம் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றது. அரசியலும்கூட அப்படித்தான். இவ்வாறாக மாறிவரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக, இறுதியில் இந்தியா எங்களது போராட்டத்தையும் அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம். இந்தியா பல்வேறுபட்ட விடுதலை இயக்கங்களை அங்கீகரித்துள்ளது. பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் [P.L.O.] மற்றும் SWAPO போன்ற விடுதலை இயக்கங்களை அங்கீகரித்தது போல், காலப்போக்கில் எங்களையும் அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

நியூஸ் வீக் :- சுதந்திர தமிழீழத்தில் என்ன வகையான அரசியல் அமைப்பை நீங்கள் அமுல்படுத்துவீர்கள்?

பிரபாகரன் :- ஒரு சோசலிச சமுதாய அமைப்பு முறையையே [SOCIALIST SOCIETY] நாங்கள் உருவாக்குவோம். சோசலிச அமைப்பு முறையானது சோவியத் மற்றும் சீன பாணியில் இல்லாமல் தனித்தன்மையான, இணையற்ற ஒரு சோசலிச மாதிரியாகவே இருக்கும்.

நியூஸ் வீக் :- இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையை தடுப்பதற்கு இந்திய இராணுவத்தை அழைப்பதற்கு நீங்கள் எப்போதாவது யோசித்ததுண்டா?

பிரபாகரன் :- இந்திய இராணுவத்தின் தலையீடு அவசியமில்லை. ஏனெனில் சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொள்ளக் கூடிய அளவுக்கு போதுமான வலிமையும், திறமையும் உள்ள படைவீரர்கள் எங்களிடம் இருக்கின்றார்கள். உண்மையில் சொல்லப்போனால் இந்திய இராணுவத்தினது தலையீடானது, ஏனைய சர்வதேசப் படைகள் சிறிலங்காவில் தலையிட்டு ஒரு குழப்பமான நிலையை உருவாக்கவே வழி வகுக்கும்.



## இரும்பின் இசை

கண்ணுக்குள் விரிகிறது
கடல்.
கடலின் அலைகளில்
இதயத்தின் குமுறல்.
குமுறும் நீரினுள்
நின்று எரிகிறது
தீயின் ஜுவாலை.
தீயினுள் பிறக்கிறது
இரும்பின் இசை.
இதயத்துள் இசைமோத
தூரங்களாய் விரிகிறது
உயிரின் அலை.
அலைக்கைகள் தட்டித்
திறக்காத கல்லின்
கதவுக்குத் திறவுகோல்
நெருப்பு.
நெருப்பின் திசையில்
நிமிரும் கனவு.
கனவுக்கு வழிகாட்டும்
தணலின் சுவடுகள்.
தணலாக மலர
தோளிலே படர்ந்து
காத்திருக்கின்றன
இரும்பு நெருப்பின்
அரும்புகள்.
அரும்பினுள்ளே
நட்சத்திரமாய்
புதைத்திருக்கிறது
ஒருபுது உலகு.
நீசக் குகையின்
இருள் அதைக் கல்லினால்
மரணக் கதவுக்கு
வழிகாட்ட நெஞ்சில்
முளைத்திருக்கிறது
விஷத்தின் கதிர்.
கதிரின் மறுமுனையில்
அரும்புகின்றன
ஆயிரம் கண்கள்.
கண்ணுக்குள் விரிகிறது
கடல்....

— பிரமிள்

## நெஞ்சின் அலைகள்

அனாதையாய் என் அம்மா எங்கிருக்கிறாள்?
காற்றே, நீ தான் அறிவாய், சொல்.

எல்லாவற்றையும் இழந்து என் தங்கை
எந்த முகாமில் நடைப்பிணமாய் திரிகிறாள்?

வதைக் கூடத்தின் இருட்டறையில் அண்ணனின்
கதறலைக் கேட்டாயோ நீ?

வீடும், வேலியும், சைக்கிளும் எரிய,
பூவரசம் பூ கருகக் கண்டிருந்தாயோ?

உறைந்த ரத்தத்திற்கும், கனிந்த புகைக்கும்
எழுந்த ஓலத்திற்கும் நீயே சாட்சி.

இரும்புக் கழுகுகள் வட்டமிடும் வானம்.
நெருப்பில் நடக்கிறது என் காலம்.

துயரத்தின் சுழலில் நீயும் நானும்
புயலாகும் நேரம் வருகிறது.

வேதனையின் விலை வெஞ்சினம்.
வெந்து தணியட்டும் காடுகள்.*

☆ ☆ ☆

ரத்தத்துளிகளையே ரவைகளாக்கி விடுதலை
வேட்கையுடன் எழுந்த தோழர்கள் எங்கே?

பிறந்து, தவழ்ந்து, விளையாடிய மண்மடியிலே
துவக்கு புகையும் கைகளுடன் மடிந்தனர் சிலர்.

அன்னை பூமி அளித்த இறுதி அமிர்தத்
துளி விஷத்தில் மீளாது உறங்கினர் சிலர்.

ஐரோப்பியக் குளிரின் இதம்
தேடிச் சென்றனர் இன்னும் சிலர்.

என்றாலும் எம்மண் மயானமாகிவிடவில்லை
உறுதியாய் நிற்கின்றன ஆயிரமாயிரம் பனைகள்.

எரிக்கும் மணல்வெளியின் கீழ் நீரூற்றில்
நம்பிக்கையின் உயிரோட்டம்.

தகிக்கும் நெருப்பின் மேல் வெள்ளமாய்
பிரவகிக்கிறது எங்கள் சக்தி

— மூதூர் சிவானந்தராஜா

* பாரதி எழுதிய அர்த்தத்தில்